பக்கங்கள்-16 | 09,வைகாசி.2021 | விலை-30.00




# தினப்புயல்

news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –343

## வடகிழக்கில் ஆசனங்களை தக்கவைத்துக்கொள்ளுமா? தமிழ் தேசிய கூட்டமைப்பு



## இலங்கையின் தேசியவாதத்திற்கு அச்சுறுத்தலாக சீனா, இந்தியா, அமெரிக்கா



## தமிழ் அரசியல்வாதிகளின் குரல் வளையை அரசாங்கம் நசுக்கிய வரலாறே இன்று வரை...



# வடகிழக்கில் ஆசனங்களை தக்கவைத்துக்கொள்ளுமா? தமிழ் தேசிய கூட்டமைப்பு



தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பானது தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் 22 ஆசனங்களை தக்கவைத்துக் கொண்டது. ஆனால் இன்று போனஸ் ஆசனங்களாக வடகிழக்கில் 10 ஆசனங்களையே தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. சிறிலங்கா சுதந்திர கட்சி உட்பட இதர கட்சிகள் தமிழ் மக்களினுடைய வாக்குகளை சுரண்டியதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களே காரணம் என்று கூறப்படுகின்ற கருத்து சரி என்பதற்கு ஒரு உதாரணமாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் பின்னடைவு என்பது காணப்படுகிறது. இதிலிருந்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஏற்கனவே ஒன்றிணைந்து செயற்பட்ட கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் தேர்தல் களத்தில் இறங்குவது அவசியமாகும். அத்தகையதொரு சூழ் நிலையை ஏற்படுத்தினால் மட்டுமே தமிழ் தேசிய கூட்டமைப்பானது மீண்டும் ஆசனங்களை கைப்பற்றக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும்.

கடந்த காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள்தமது சுயலாப அரசியலுக்காக அவர்கள் பாராளுமன்றத்தில் இருந்த காலகட்டத்தில் கம்பரலியாவை தவிர வேறு எந்த அபிவிருத்தி திட்டத்தையும் செய்ய வில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக பேசப்படுகின்றது. ஆனாலும் அரசனை நம்பி புருசனை கைவிட்டது போன்று அதற்கு பின்னர் பாராளுமன்றத்திற்கு சென்றவர்களும் பாரியளவில் மக்கள் எதிர்பார்த்த வண்ணம் தமது நகர்வுகளை நகர்த்தவில்லை என்பது இன்றைய அரசியல் யதார்த்தத்தின் உறுதித் தன்மையாகும். தேர்தல் அரசியல் என்பது தாம் செலவழித்த பணத்தை மீளவும் சம்பாதிக்கின்ற ஒரு சூதாட்ட அரசியலாக மாற்றம் பெற்றிருப்பது இன்றைய அரசியலின் நிலைப்பாடாக உள்ளது. தமிழ் மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது அணுகுமுறைகளை கொண்டிருக்க வேண்டும்.

1. வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டிலிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு விலகிச்சொல்லக்கூடாது.
2. அரசாங்கத்தினுடனான இணக்க அரசியலிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.
3. இனப்படுகொலை அரசியலை காப்பாற்ற நினைப்பது என்பது சொந்த செலவில் சூனியம் வைப்பதற்கு சமனாகும்.
4. திட்டமிட்ட சிங்கள குடியேற்றம், காணி அபகரிப்பு, பௌத்த விகாரைகள் வடகிழக்கில் நிர்மாணிப்பு, வட கிழக்கு நிர்வாக கட்டமைப்பில் சிங்களவர்கள் நியமிக்கப்படல், தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் தமிழர் பாரம்பரியங்களை அழிக்கும் நடவடிக்கை, கடல் வளம் சுரண்டல், கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட் டோருக்கான முடிவுகள் இல்லாமை, முன்னாள் போராளிகளின் வாழ்வாதார பிரச்சனைக்கு ஒரு முடிவில்லாமை, வடகிழக்கில் சிவில் கட்டமைப்பு என்ற பெயரில் இராணுவ தரப்பினரால் நடத்தப்படும் துஷ்பிரயோகங்கள், சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் பலாத்காரம் மற்றும் வடகிழக்கு பிரதேசங்களில் இராணுவ தூபிகளை அமைத்து நினைவு தினங்களை கொண்டாடுதல், மீள் குடியேற்றம் என்ற போர்வையில் சிங்கள பௌத்த இனவாதிகள் விகாரைகளை கட்டுதல், போன்ற விடயங்களை உடன் அமுலுக்குவரும் வகையில் தடுத்து நிறுத்தினால் மட்டுமே தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னைய தமிழ் தேசிய கூட்டமைப்பாக பரிணாமிக்குமே தவிர பாம்புக்கு வாலையும் மீனுக்கு தலையையும் காட்டும் அரசியலை செய்வார்களாக இருந்தால் எதிர்வரும் மாகாணசபை தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் தமிழ்தேசியகூட்டமைப்பானதுஇல்லாது போகின்ற ஒரு சூழல் உருவாக்கப்படும்.

இவ்வாறு விரக்திகளை உருவாக்கி தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பை சிதைப்பதற்காகவே அரசதரப்பு இவ்வாறான கடிவாளங்களை தமிழ் அரசியல் தலைவர்கள் மீதும் தமிழ் இனத்தின் மீதும் திணித்து வருகின்றார்கள்.

இதற்காக தமிழ் பேசுகின்ற அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து பாராளு மன்றத்தில் குரல் கொடுத்தால் மட்டுமே ஓரளவேனும் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணமுடியும். சர்வதேச ரீதியாக இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அழுத்தங்களை பார்க்கும் பொழுது இலங்கையில் இடம்பெற்றது இனப்படு கொலை என நிரூபிக்கப்படுகின்றது. அதற்கான சாட்சியங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு சர்வதேசத்திற்கு வழங்குமாக இருந்தால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வுதிட்ட இலக்கை அடைய முடியும். கருணா, அங்கஜன், பிள்ளையான், டக்ளஸ் தேவானந்தா, வியாழேந்திரன் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் இவர்கள் போன்று அரசாங்கத்துடன் ஒத்து அரசியலை செய்வோமாக இருந்தால் எமது தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற இலக்கில் இருந்து விடுபடுகின்ற சூழ்நிலை உருவாக்கப்படும். நியமான அரசியலிலிருந்து நிழல் அரசியலுக்கு தாவுகின்ற நடவடிக்கைகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு உடன் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்டதொரு இயக்கமாக அரசாங்கம் அறிவித்திருக்கும் அதே நேரம் சர்வதேச ரீதியாகவும் உள்ளூர் ரீதியாகவும் 14 கட்ட பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்து விட்டது. அப் பொழுது பயங்கரவாதிகளாக அறியப்படாத தமிழீழ விடுதலைப்புலிகளை இன்று பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி ஒட்டுமொத்த தமிழினத்தையே பயங்கரவாதிகள் என சித்தரித்து காட்டுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததொன்று. இதனை எதிர்த்து தமிழ் தேசிய கூட்டமைப்பு வலுவான போராட்டங்களை நாடளாவிய ரீதியில் நடத்த வேண்டும். சாண் ஏற முழம் சறுக்குகின்ற அரசியலை தமிழ் தேசிய கூட்டமைப்பு செய்யுமாக இருந்தால் ஒரு முன்னேற்றகரமான நகர்வை அல்லது தமிழ் மக்களுடைய இலக்கை அடைய முடியாத சூழ்நிலை உருவாக் கப்படும். 30 வருட போராட்டமானது தமிழினத்திற்கு ஒரு பாடமாகவே அது கற்றுத்தந்திருக்கிறது.

தமிழினத்தை முள்ளிவாய்க்கால் வரை கொண்டுசென்ற இலங்கை அரசு 1 இலட்சத்து 40 ஆயிரம் வரை சிவிலியர்களை கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்துவிட்டு அத்தகைய தொரு சூழ்நிலையில் சர்வதேசிகளும் ஒரு மௌனிகளாக இருந்துவிட்டு இன்று தமிழர்களின் பிரச்சனைக்காக முதலைக் கண்ணீர் விட்டு அல்லது சர்வதேச ரீதியாக அனுகூலங்களை பெறுவது போன்ற சமிஞ்சைகளை காட்டி தமிழினத்தை மீண்டும் ஒரு ஏமாற்று அரசியலுக்கு கொண்டு செல்கின்ற அரசியலை தமிழ் தேசிய கூட்டமைப்பு தொடர்ந்தும் செய்யுமானால் தற்பொழுது இருக்கும் நிலையைவிட மோசமான நிலைக்கு தள்ளப்படுவார்கள். தமிழ் கட்சிகளின் ஒற்றுமை என்பது தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையை இலக்காக கொண்டு அமைய வேண்டும். ஒத்து ஊதுகின்றி அரசியலை மேற் கொள்பவர்களை அகற்றிவிட்டு தமிழினத்திற்காக குரல் கொடுப்பவர்களை ஒன்றிணைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு மேற் கொள்ளுமாக இருந்தால் இழந்த ஆசனங்களை கைப்பற்றி அரசியல் அரங்கில் தமிழர்களுக்கான ஒரு தீர்வை பெற்றுக்கொள்ளும் நிலைமை உருவாக் கப்படும். இல்லையேல் தமிழ் தேசிய கூட்டமைப்பு சிதைவதை எவராலும் தடுக்க முடியாது.

இரணியன்

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தினப்புயல்
ஆசிரியர்பீடம்,
இல:154, 5வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனா மூன்றாம் அலையும் அதன் தாக்கமும்

கொரோனா வைரசின் 1ஆம்.2ஆம் அலையின் தாக்கம் சற்று தணிந்து உலக நாடுகள் தம்மை ஆசுவாசப்படுத்தி இருந்த நிலையில் மூன்றாம் அலையானது உலக நாடுகளை புரட்டிபோடத்தொடங்கியுள்ளது. இந்த மூன்றாம் அலையின் தாக்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடாக இந்தியா காணப்படுகின்றது. வரலாற்றில் காணாத பேரவலம் அங்கு அரங்கேறி வருகிறது.ஒவ்வொரு நாளும் 3இலட்சம் பேர் இங்கு பாதிக்கப்பட்டு வருகின்றனர். நாளொன்றுக்கு 5000பேர் அங்கு பலியாகிவருகின்றனர்.

இந்நிலையில் உலககளவில் 1ஆம்.2ஆம் அலையினை எமது இலங்கை ஓரளவு கட்டுப்படுத்தி மிக விரைவில் அதன் தாக்கத்தில் இருந்து மீண்டெழுந்த நிலையில் மக்களின் அசமந்த போக்கால் 3ஆம் அலையில் இலங்கை தற்பொழுது சிக்கி திணறிவருகிறது நாளொன்றுக்கு தொற்றாக 500-1000க்குள் இருந்த நிலையில் தற்பொழுது 2500ஐ தாண்டி கோரஆட்டம் ஆட ஆரம்பித்துள்ளது. மரணம் கூட நாளொன்றுக்கு 30க்கு மேல் சென்றுக்கொண்டிருக்கும் பேரவலம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

1ஆம்.2ஆம் அலையில் 75000பேருக்குள் இருந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் இறுதிப்பகுதியில் தொடங்கிய 3ஆம் அலையினால் தற்பொழுது வரை 1இலடச்த்து 29000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையில் நாட்டை முற்றாக முடக்க சொல்லி சுகாதார பிரிவு கேட்ட பொழுதும் அரசு அதற்கு உடன்பாடு இருந்து வருவதும் குறைந்தது மாவட்டத்திற்கு இடையேயான போக்குவர்தை தடுத்தால் கூட ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என்ற நிலையில் அரசானது இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருப்பதானது மிகப்பெரும் மனித பேரலவத்தை வரும் நாட்களில் ஏற்படுத்த போவது உறுதி!

தடுப்பூசிகளை அரசு சீனா.இந்தியா. ரஷ்யா போன்ற நாடுகளில் இருந்து பெற்ற பொழுதிலும் எதுவித பலனும் கிடைத்ததாக தெரியவில்லை. இந்தியா தடுப்பூசியை தயாரித்த நாடாக இருந்த போதிலும் 3ஆம் அலையானது அந்த நாட்டையே முடக்க வேண்டிய சூழ் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இம்மாதம் 10ஆம் திகதி முதல் 2 வாராத்திற்கு தமிழ் நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்ப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இந்நிலையில் இலங்கையரசானது 1ஆம் அலையை முறியடித்தது போல 3ஆம் அலையின் தாக்கத்தில் இருந்து மக்களை காப்பதற்கு குறைந்தது 2வாரா காலமாவது நாட்டை முற்றாக முடக்கி ஏற்படபோகும் மனித பேரவலத்தை தடுக்க முன்வர வேண்டும் என்பதே அனைத்து சுகாதார பிரிவினரினது கோரிக்கையாகும். அரசு இதற்கு செவிகொடுக்குமா?

# 146 உலக வரலாற்றில் குறுஞ்சமர்

பொதுசனங்களிடம் இருக்கிற ஆயுதங்களையும் வேண்டி வைத்திருக்கலாம். இதற்கெல்லாம் கெரில்லா போராட்டத்தில் பங்கெடுக்காத பொதுமக்களிடமிருந்து அவர்களது ஆயுதங்களைப் பெற்றுகொள்ளவேண்டும்.

ஆயுதங்கள் அலகுவானவையாகவும் தன்னியக்கச் சுடுகலன்களாகவும் அரைத் தன்னியக்கச் சுடுகலன்களாகவும் அத்துடன் கனரக சுடுக்கலன்களாகவும்( இயந்திரச் சுடுகலன்.எறிகணை செலுத்தி போன்றன) இருக்க வேண்டும்.

குழுக்கள் தோற்றம்பெற்ற ஆரம்ப காலப்பகுதியில் சமர்களில் வேட்டைச் சுடுகலன்களை.குறிப்பாக சுயரவையேற்றல் தொழிற்பாட்டைக் கொண்ட வேட்டைச் சுடுகலன்களைப் பயன்படுத்தலாம்.

வெடிமரந்தை சமர் நடவடிக்கை மேற்கொள்ளாமல் பெற்றுக்கொள்ளலாம். அதாவது வெடிபொருட்கள் பயன்படுத்தப்படுகின்ற பாறைத் தகர்ப்பு கட்டுமான வேலைத்தளங்கள் அமைந்துள்ள இடங்களில் இலகுவாக பெற்றுக்கொள்ளலாம்.

வெடிமருந்தை உலர்ந்த வெதுவெதுப்பான இடங்களில் சேமித்து வைக்க வேண்டும். நிலத்தில் புதைத்து வைக்க கூடாது. உலர்ந்த மரத்தாலான பெட்டிகளினுள் வெடிபொருளை வைக்க வேண்டும். வெடிபொருள் சேமித்து வை க்கப்பட்டுள்ள இடம் காற்றோட்டச் சுற்று நடைபெறுமிடமாக இருக்கவேண்டும். வெடிப்பியைக் கொண்டவெடி பொருட்களைச் சேமித்து வைக்கும்போது. மிக்க கவனமாக கையாளவேண்டும்.

வெடிமரந்தைக் கண்ணிவெடிகளிலிருந்தும் குண்டுகளிலிரந்தும் பெற்றுக் கொள்ளலாம். 3-4கி.கி. வரையான எடை கொண்ட கண்ணிகள் இதற்கு மிகப்பொருத்தமானவையாகும். இதற்காகவென 250 கி.கி எடையைக் பொண்ட கண்ணிகளையும் அத்துடன் விமான குண்டுகளையும் பயன்படுததலாம். இவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வெடிமருந்தை உலோகத்தாலான அல்லது கண்ணாடியிலான பாத்திரத்தினுள் அடையவேண்டும். வெடிப்பி நுழைக்கப்பட்ட இப்பாத்திரம் - தரமான குண்டாக விளங்கும்.

### உணவு ஒழுங்குபடுத்தல்

நகரங்களுக்கும் மக்கள் வாழ்விடங்களுக்கும் வெளியே செயற்படுகின்ற கெரில்லாக்கள் வழக்கமான சாப்பாட்டை இழக்கின்றார்கள். அவர்கள் உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் நிலைக்கு அல்லது எதிரியிடமிருந்து அவற்றைக் கைப்பற்றும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அவசியமேற்படும்போது. உணவுப் பொருட்களை விவசாயிகளிடமிருந்தும் அரைக்கும் ஆலை . கடைகள். களஞ்சியங்கள் போன்றவற்றின் உரிமையாளர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளவேண்டியயேற்படுகின்றது. இதன் போது. எச்சந்தர்ப்பத்திலும் மக்களுடன் முரண்படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்களாகவே மனமுவந்து கெரில்லாக்களுக்கு உதவும் நிலைமை ஏற்படும் வண்ணம் அவர்களுடன் உரையாட வேண்டும்.



ஒழுங்குவிதிப்படி. சுற்றிவர மக்களுள்ள இடத்திலிருந்து உணவருந்துவதை அவசியம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். சாப்பாட்டை ஒழுங்குபடுத்தும் போதும் சாப்பிடும் போதும் எதிரி வீசியெறிந்த நல்ல நிலையில்லாத உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றனவா என்பதில் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும்.

### மக்கள் சீட்டத்துடனான தொடர்பு

நாட்டு மக்கள் கூட்டம் - இவர்கள் கெரில்லாக்களின் பாதுகாவலர்கள் ஆவார்கள். அவசியம் மக்களுடன் தொடர்ச்சியாகத் தொடர்பை பேணுவதுடன். அரவ்களை காக்கவும் வேண்டும்.

கெரில்லாக் குழுக்கள் பிரதேச மக்களுடன் தொடர்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.மக்களது விடுதலைக்காகவே கெரில்லாக்கள் போராடுகின்றார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி. அவர்களைப் போராட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தவும் வேண்டும்.

எதிரி மக்களிடத்தில் கெரில்லாக்களைப் பற்றி விசாரிப்பானானால். மக்கள் பின்வருமாறே பதிலளிக்க வேண்டும். "நான் காணவில்லை". "எனக்குக் கேட்கவில்லை"."எனக்குத் தெரியாது". என்பனவாகும். மக்களின் ஆதரவு - இது கெரில்லாக்களின் வெற்றியினது இரகசியம். இது எதிரிக்கெதிரான எதிரிப்பு போராட்டத்துணை.

மக்கள் ஒருமித்துச் செயற்படும் போது நினைவிற்கொள்ளவேண்டிய விடயம் யாதெனில். மக்கள் மத்தியில் துரோகிகளையும் எதிரிக்கு தகவல் சொல்பவர்களையும் கண்டுகொள்ளலாம். இவர்கள் இலகுவில் கெரில்லாக்களுடன் ஒத்துழைத்துச் செயற்படத் தாயாராக இருப்பதுடன். அதேநேரத்தில் எதிரிக்காக. அதாவது கெரில்லாக்களுக் கெதிராக வேலையும் செய்வார்கள். ஆகவே தான். கெரில்லாக்களின் தீவிர ஆதரவாளர்களால் மக்கள் மத்தியிலுள்ள இவ்வாறான ஆட்களைக் கண்டறிந்து முற்கூட்டியே கெரில்லாக்களுக்கு எச்சரிக்கை செய்யலாம். அத்துடன். எதிரியின் படைப்பிரிவுகள். ரோந்துகள் போன்றன வருவதைப் பற்றியும் எச்சரிக்கை செய்யலாம்.

மக்களுடனான வேலை அரண்டு வழிகளில் மேற்கொள்ளபடவேண்டும். முதலாவது வழி - இது மக்களுடனான திறந்த தொடர்பு. இரண்டாவது - இரகசியத் தொடர்பு.

### இரகசியத் தொடர்பு (வேலை) பின்வருவனவற்றைக் கவனித்துக் கொள்ளவேண்டும்.

- மக்களிடத்திலிருந்து ஆதரவாளனை அல்லது சிறப்பானத் தயார்ப்படுத்தப்பட்ட கெரில்லாக்களில் ஒரவனைக் கொண்டு எதிரியின் உதவியாளர்கள் மேல் வெளித்தெரியாத கண்காணிப்பை மேற்க்கொள்ளல்.
- தமது முகவர்களை மக்கள் மத்தியில். அத்துடன் எதிரி அணிகளுக் குள்ளும் நுழைத்தல்.
- தகவல்களையும் ஆவணங்களையும் பொருட்களையும் சேர்த்தல்.
- மக்களிடத்தில் காயமடைந்தவர்களையும் நோய்வாய்ப்பட்டவர்களையும் மறைப்பாக (இரகசியமாக) வைத்திருத்தல்.
- ஆயுதங்கள் . கெரில்லாக்களின் உடைமைகள் போன்றன சேமித்து வைக்ககப்பட்டிருக்கின்ற இடத்தின் இரகசியத்தைப் பேணுதல்.
- பெரில்லாக்களது முகவர்களும் வேவுக்காரர்களும் குறித்த பிரதேச மக்களது பண்புக்கமைய ஆடை அணிகள் அணிந்து . சாதாரண மக்களைப் போல செயற்ப்படுதல்.
- மக்கள் மத்தியில் பத்திரிகைகள். துண்டு பிரசுரங்கள். அறிக்கைகள் போன்றவற்றை வெளியிடுதல் போன்றனவாகும்.

தொடர்வான்...
நெற்றிபொறியன்

# தமிழ் அரசியல்வாதிகளின் குரல் வளையை அரசாங்கம் நசுக்கிய வரலாறே இன்று வரை...

தமிழ்த்தேசியம், தமிழர் உரிமை என்பவற்றை எதிர்க்கண்ணோட்டத்துடன் பார்த்துவரும் தமிழ் மக்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் மீதான கசப்புணர்வு நீண்டகால வரலாற்றைக் கொண்டது. இலங்கையில் குடிமக்கள் அரசாட்சி ஆரம்பித்த காலம் முதல் இன்று வரையான நாட்கள் வரையில் தமிழ்மக்கள் மீதான காட்டுமிராண்டித்தனமான அடக்கு முறைகளும், குரல்வளை நசுக்கல்களும் தொடர்ந்து வந்திருப்பதை வரலாறு உணர்த்தும். அந்நியர்களின் ஆட்சியின் போது இலங்கைக் குடிமக்கள் உள் நாட்டு அரசியல் தலைமைத்துவத்தையே விரும்பினர். இதனால் சுதந்திரத்தை வழங்கிவிட்டுச் சென்ற அந்நியர், நாட்டை ஒற்றையாட்சியின் கீழ் நடத்த ஏற்ற அரசியல் யாப்பையும் உருவாக்கிவிட்டுச் சென்றனர்.

ஆனால் பின்னாளிலேயே இலங்கையில் சிங்கள அரசியல்வாதிகளின் கபட நாடகம் தமிழருக்கு விளங்கியது. அந்நாளில் சிங்களவர்களை நம்பியிருந்த தமிழ் அரசியல்வாதிகள் பலர் வரலாற்றில் ஏமாற்றப்பட்டவர்களானார்கள். அவ் வரலாறு இன்றுவரை தொடரத்தான் செய்கிறது. அதுபோல பின்னால் வந்த நாட்களில் சிங்கள அரசாங்கம் தமிழர்களைப் பகடைக்காயாக்கும் நிலைப்பாட்டை எடுத்துவந்ததுடன் தமது அரசியலை செம்மையுறச் செய்தும் வரலாயினர். அதற்காக சந்திரிக்கா அரசின் கைப்பொம்மையாக கதிர்காமரும், ரணில் விக்கிரமசிங்கவின் கைப்பிள்ளையாக கருணா அம்மானும், மஹிந்த ராஜபக்ஷ வின் கைப்பிள்ளையாக பிள்ளையானும் மாறியமை தமிழ் மக்களின் துரதிஷ்டமே. எனினும் அன்றுமுதல் இன்றுவரை தமிழ்மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக தமிழரசுக்கட்சி (இந்நாளில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு) இருந்து வந்திருக்கின்றது.

அரசியல் வரலாற்றில் மலையகத் தமிழரின் குடியுரிமையை இலங்கை அரசாங்கம் பறித்த நிலையிலும், இலங்கை குடியுரிமைச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலும், ஒற்றையாட்சி முறை இலங்கையில் தமிழர் உரிமையுடன் வாழ்வதற்கு உகந்ததல்ல என்பதனாலும் தமிழரசுக்கட்சி உருவானது. ஆனாலும் ஆரம்பம் தொடக்கம் தமிழ் அரசியல்வாதிகள் பெரும்பான்மை அரசாங்கத்தினால் அடக்கியொடுக்கப்படும் நிலைமைக் குள்ளேயே உள்ளாகி வந்திருக்கின்றனர். 1956ம் ஆண்டு தேர்தலில் தமிழரசுக்கட்சி தமிழ்ப் பகுதிகளில் பெரும்பான்மை இடங்களை வென்று, தமிழர் அரசியலில் முன்னணிக்கு வந்தது. அதே வேளை ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்திலும் இணைந் திருந்தது. அப்போது மொழிக் கொள்கை முதலான முக்கிய பிரச்சினை களில் தமிழரின் விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் அப்போதைய அரசு செயற்பட்டிருக்கவில்லை. மாறாக சிங்களம் மட்டும்என்ற சட்டத்தை பிரகடனப்படுத்தியது. இதனால் அதற்கு எதிரான போராட்டங்களை தமிழரசுக்கட்சி மேற்கொண்டது. அவை யணைத்தும் அரசினால் அடக்கப்பட்டன.

அதேபோல 1958இல் தமிழருக்கு எதிராக நடந்த இனக்கலவரம் தமிழ்மக்களை வெகுவாகவே பாதித்தது. செல்வநாயகம், பண்டாரநாயக்கா ஆகியோரிடையே தமிழ்மக்களின் குறைகளை ஓரளவு நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமும் சிங்களவரின் கடும் எதிர்ப்புக் காரணமாக கிழித்தெறியப்பட்டது. அதற்கு எதிர்மாறாக ஒற்றையாட்சிக் கொள்கைமீது நம்பிக்கை வைத்து ஆட்சியிலிருக்கும் சிங்கள அரசாங்கத் தோடு ஒத்துழைத்தது தமிழரசுக்கட்சியின் தாய்க்கட்சியான தமிழ்க் காங்கிரஸ் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1965இல் நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அமைத்த அரசாங்கத்திலும் எதிர்பார்த்த எந்த நன்மைகளும் தமிழ்மக்களுக்கு தமிழ் அரசியல் வாதிகளால் பெற்றுக்கொடுக்க முடியாமல் இருந்தது. 1970இல் நடந்த தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் இணைந்த ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தது. இக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் புதிய குடியரசு அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டதும், முன்னைய அரசியல் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புகளை நீக்கியதும் விசேடமானதாகும். இதனை எதிர்த்த தமிழரசுக்கட்சியின் அனைத்து நடவடிக்கைகளும் பயனற்றுப் போயிருந்தன.

இதன்பின்னர் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வகையில் தமிழ்மக்களின் பலமான கட்சியாக புனரமைக்கப்பட்டது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆகும். சுயாட்சி என்ற கோரிக்கையை பொதுவாகவே வலியுறுத்தி வந்திருந்தாலும் காலப்போக்கில் தன்னாட்சி அதிகாரம் என்ற கொள்கையின் கீழ் செயற்பட்டு வரலாயிற்று. இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இனப்பிரச்சினை யைத் தீர்ப்பதற்காக அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்திருக்கிறது. இதற்காக பல தமிழ் அரசியல்வாதிகள் அச்சுறுத்தப்பட்டும், கொலை செய்யப்பட்டும் வந்திருக்கின்றனர்.

தமிழ்மக்களின் அரசியல் பிரதிநிதிகள் என்ற வகையில் தமிழ் அரசியல்வாதிகள் காலந் தோறும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவே குரல் எழுப்பிவந்திருக்கின்றனர். இதனால் பல அச்சுறுத்தல்களை எதிர் கொண்டது மட்டுமல்ல, சிலர் அரசியலுக்காகவே இறந்தும் போயுள்ளனர். **2005 காலப்பகுதிகளில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவநேசன், ஜோசப் பரராசசிங்கம், நடராஜா ரவிராஜ் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர்.**

ஜனநாயகப் பண்புகளுக்கமைய நாடாளு மன்றம் சென்று அடிவாங்கிய வரலாற்றின் தொடர்ச்சியாக 2005ம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர் தாக்குதலில் தமிழத்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் படுகொலை செய்யப்பட்டார். பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்று விட்டு திரும்பிச் சென்ற நிலையிலேயே அவரது மரணம் அமைந்திருந்தது. நாடாளுமன்ற பதவிக்குரிய சிறப்புரிமை பற்றி பேசிய நிலையில், பாதுகாப்பு அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோப் புள்ளே பகிரங்க எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் இம்மரணம் இடம்பெற்றிருந்தது.

அதனையடுத்து நத்தார் தினத்தன்று இரவுத் திருப்பலியிற் கலந்துகொண்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் திரு.ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் திருப்பலியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். பத்திரிகையாளனாக சேவையை ஆரம்பித்து பின்



அரசியல்வாதியாகி வடக்கிலும், கிழக்கிலும் இடம்பெறுகின்ற மனிதவுரிமை மீறல்களை வெளியுலகுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டியவர். தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்று தனது அரசியற்பணியை ஆரம்பித்து பல தசாப்த அனுபவங்களைக் கண்டவர்.

அடுத்து சட்டத்தரணியாக பணியாற்றிய நடராஜா ரவிராஜ் அந்நாட்களில் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டு, சிறையி லடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளான அப்பாவித் தமிழ் இளைஞர்களை மீட்பதற்கு பாடுபட்டவர். அப்பாவித் தமிழர்கள் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளின் கைது விடயத்தில் ஓரளவேனும் வழக்குகளை எடுத்து விடுதலை பெற்றுக்கொடுக்க ஆர்வமுடன் செயற்பட்டவர். இதனை விட அவர்களுக்கு ஆதரவளித்து வழிகாட்டு வதிலும் கொழும்பில் முன்னின்று பாடுபட்டு வந்தார். போராட்டத்தையும், அதற்கான நியாயங்களையும், மக்கள் அனுபவித்து வந்த சொல்லொணாத் துன்பங்களையும் சிங்கள மக்களுக்கும், சர்வதேசத்திற்கும் உரிய முறையில் கொண்டுசென்றார்.


தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். தமிழர் பிரச்சினைகளை வெளிக் கொணர்வதில் உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களைச் செம்மையான முறையில் பயன்படுத்தினார். குறிப்பாகச் சிங்கள ஊடகங்களை மிகச் செம்மையான முறையில் பயன்படுத்தி தமிழர் போராட்டத்தின் நியாயங்களையும், தமிழர் தாயகத்தின் உண்மை நிலைமைகளையும் உடனுக்குடன் சிங்கள மக்களிடம் எடுத்துக் கூறினார். இதனால் இவரது அரசியல் செயற்பாடுகள் இராணுவத்திற்கும், அரசிற்கும் தலையிடியாய் அமைந்தது. இவரது இந்தப் பணிதான் அவரது உயிரைப் பறிப்பதற்கும் முதன்மைக் காரணமாக இருந்தது.

தெற்கிலுள்ள சிங்களக் கடுங் கோட்பாட்டாளர்கள் புலமைவாய்ந்த தமிழ் அரசியல்வாதிகளை எப்போதும் விட்டுவைக்க முயல்வதில்லை என்பதற்கு இச்சம்பவங்களே போதுமானவை. இவர்கள் தவிர பல ஊடகவியலாளர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எழுதியதால் மாண்டுபோன வரலாறுகளும் இருக்கத்தான் செய்கின்றன. இத்தகைய வரலாற்றிலிருந்து மீளெழ முடியாதவர்களாக தமிழ்மக்கள் உள்ளனர். இதனால் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை இப்போது வடக்கில் பலப்படுத்தியுள்ளனர். ஆனால் வடமாகாணசபையின் ஆட்சியதிகாரத்தை நிலைநிறுத்துவதிலும், கொண்டு செல்வதிலும் பல முட்டுக்கட்டைகளை இலங்கை அரசாங்கமும், தமிழினத் துக்குள்ளேயேஇருக்கும்அரசதரப்புஅரசியல் வாதிகளும் போட்டு வருகின்றனர். தமிழ்த் தேசியம் மற்றும் தமிழர் உரிமை ஆகியவை பற்றி தொடர்ச்சியாகப் பேசிக் கொண்டிருக்கும் நிலையில் இன்று சர்வ தேச ரீதியாக இதன் பார்வை கவனம் பெற்றிருக்கிறது. தமிழர்களின் உரிமை பற்றிப் பேசுவதற்கு இலங்கைத்தீவிலுள்ள ஒரே அமைப்பு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு. இதனால் கூட்டமைப்பிற்குள் இருக்கும் ஒற்றுமையைச் சிதைத்து கட்சியை அடியோடு அழித்துவிடவும் மஹிந்த அரசு சில மாற்றுக்கட்சிகளைப் பயன்படுத்திக் கொண்டு செயற்பட்டுவருகிறது. இவை தவிர சர்வதேச ரீதியிலான போர்க்குற்ற விசாரணை குறித்த பேச்சுக்கள் பல மடைந் திருக்கின்ற நிலையில் அரசாங்கத்தின் நேரடியான கோபம் தமிழ் அரசியல் வாதிகள் மீதே சென்றிருக்கிறது.

தற்போது வடக்கு மாகாண சபை யினருக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் முறுகல் நிலைமை தொடர்ந்து வருகிறது. வடக்கு மாகாண சபை வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதில் சிரமமான சூழல் நிலவுகின்றது. மாகாண சபையில் முன்வைக்கப்படுகின்ற பிரேரணைகள் அரசாங்கத்துக்கு அதிருப்தி ஏற்படுத்து பவையாக அமைகின்றன. தம்மோடு இணைந்து செயற்பட வேண்டும் என்பதையே அரசாங்கம் விரும்புகின்றது. ஆனால் அதற்கு இசைந்து போகும் நிலையைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எப்போதும் எடுக்கப்போவதில்லை. வடமாகாண நிர்வாகசபை தொடர்பில் அரசாங்கம் அளித்துள்ள வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இறுதிக்கட்ட யுத்தத்தில் காணாமற்போனவர்கள், நடைபெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் திருப்திகரமான முயற்சிகளை மேற்கொள்ளாத காரணத்தினால், சர்வதேச ரீதியான விசாரணையை த மி ழ் த் தே சி ய க் கூ ட் ட மை ப் பு வலியுறுத்தியது. இதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீதும், முதலமைச்சர் மீதும் அரசாங்கம் ஆத்திரத்தை வெளிப்படுத்தி வருகிறது. வடமாகாணத்தை முழுமையாக இராணுவ அதிகாரத்திற்குள் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்கின்றது. இவ்வாறான நிலைமைகள் தொடரும் பட்சத்தில் தமிழின அடக்குமுறைக்கு எதிராக போர்க்கொடி தூக்க வேண்டியதன் கட்டாயத்துக்குள் அடுத்துவரும் தலைமுறை தள்ளப்படும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

சுழியோடி

# யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள இலங்கையரசு, மீண்டும் யுத்தம் கட்டவீழ்த்துவிடுவதற்கான சதித்திட்டங்கள்!



யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள இலங்கையரசு, மீண்டும் யுத்தம் கட்டவீழ்த்துவிடுவதற்கான சதித்திட்டங்கள் அரசதரப்பிலிருந்து கசியத்தொடங்கியுள்ளது. யுத்தத்தை எவ்வாறு முன்னெடுப்பது அல்லது எவ்வாறு இனவாதங்களைத் தூண்டிவிடுவது, அதிலிருந்து நாட்டை சமாதான சூழ்நிலையற்றதாகமாற்ற வெளிநாட்டு தீயசக்திகள் முன்னின்று செயற்பட்டுவருகின்றன. அதற்கு இலங்கையரசு விலைபோயுள்ளதாக புலனாய்வுச்செய்திகள் தெரிவிக்கின்றன.

மாவிலாறில்ஆரம்பித்துமுள்ளிவாய்க்காலில் நிறைவடைந்த யுத்தத்தின் வடுக்கள் இன்னமும் தமிழ்மக்கள் மத்தியில் ஆறாத நிலையில் இருந்து வருகின்றது. தற் பொழுது சமாதான காலம், பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மீட்டி விட்டோம் எனக் கூறும் இலங்கையரசு தமது பாதுகாப்பு நிலையங்களை குறிப்பாக வடகிழக்கில் பலப்படுத்திவருகின்றது. காரணம் அமெரிக்கரசால் மீண்டும் யுத்தமொன்றை இலங்கையில் ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

அது மட்டுமல்லாது கிளர்ச்சிப்படைகள் என்ற போர்வையில் எவ்வாறு ஈராக்,சிரியா,லிபியா போன்ற நாடுகளில் இடம்பெற்றதோ அதே போன்றதான தன்மையை உருவாக்கும் போர்வையில் நாடுகடந்த தமிழீழ அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. இலங்கைப்புலனாய்வுத் தகவல்களின் படி தகவல் சேகரிப்புக்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. 85 சதவீதமான தகவல்கள் பூகோள சம்பந்தப்பட்டவையாகவே அமைகின்றது.

உதாரணமாக இலங்கையில் ஒரு இராணுவ தரையிறக்கத்தினை ஏற்படுத்த வேண்டுமாயின் கொமான்டிங் செய்வதற் கேற்ற வகையில் இத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது இலங்கையின் 65,610 சதுர கிலோ மீற்றரும் அமெரிக்க CIAயினால் வரை பிடப்பட்டு, கடல், தரை மார்க்கங்கள் உள்வாங்கப்பட்டுள்ளது

இவ்வாறான நிலையில் மற்றுமொரு யுத்தம் உருவாக்கப்படும் திட்டத்திலேயே அமெரிக்க நிறுவனங்களின் செயற்பாடுகள் இலங்கையில் அமையப்பெற்றுள்ளது எனலாம். வடகிழக்கு, தென், மேல், மத்திய, ஊவா, சப்பிரகமுவ, வடமேற்கு, வடமத்திய போன்ற மாகாணங்களை உள்ளடக்கிய மக்கள் சனத்தொகை, அவர்களின் வாழ்வாதாரம் போன்ற விடயங்களும் இவர்களுடைய ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டை சதிப் புரட்சி செய்வதற்கும் அக்காலகட்டத்தில் இவ்வாறான தரவுகளே காரணமாக அமைந்திருக்கின்றன

தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை வேறுவிதமாக மாற்றியமைக்கும் செயற்திட்டமாக இச்செயற்பாடுகள் அமையப்பெறுகின்றது. யுத்தக்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கப்படவேண்டும் என ஐ.நா சபையினால் அறிவிக்கப் பட்டுள்ள நிலையில் போர்க்குற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்காத அரசிற்கு எதிர்ப்புக்களை வழங்கும் முகமாக தமது திட்ட வியூகங்களை வகுத்துள்ளன. அதே நேரம் உலக வல்லரசின் உதவிகொண்டு வருகின்ற பிரச்சினைகளை முறியடிக்கலாம் என இலங்கையரசு எண்ணியுள்ளது. குறிப்பாக சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் ஆதரவேயென்பதாகும்.

வெளித்தோற்றத்தில் சீனா, ரஷ்யா அமெரிக்காவிற்கு எதிரானவர்கள் எனக்காட்டிக்கொள்கிறார்களே தவிர, அவர்களுடைய நட்பு அல்லது அவர் களுடைய தொடர்பாடல்கள் நேர்த்தியாகவே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. வற்றோ அதிகாரம் கொண்ட நாடாகத் திகழும் சீனா, ரஷ்யா, அமெரிக்கா, பிரித்தானியா இவற்றுள் முக்கியத்துவம் பெறுகின்றன.


அமெரிக்கா தனது நிலைகளை பலப்படுத்திக்கொள்ளும் வகையில் இலங்கையரசின் கடற்பிராந்தியங்களை கையாளும் இலக்கில் உள்ளது. அவை அவர்கள் கையில் கிட்டும் வரை இலங்கைக்கெதிரான போர் முன்னெடுப்புக்கள் இரகசிய தாக்குதல் திட்டங்களை முன்னெடுக்கும். காலத்திற்குக்காலம் அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் இந்தியாவை நம்பி தமிழினம் மண்ணைக்கவ்வியது போன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் அதே நிலைமையேற்படும்.

கடந்த காலங்களில் விடுதலைப்புலிகள் பயன்படுத்தி வந்த விமானப்பாதைகள், கடற்பிராந்தியக்கோட்டைகள், விமான ங்கள், பதுங்குகுழிகள் போன்றவற்றை இராணுவம் கைப்பற்றியது. அண்மையில் அமெரிக்கரசினால் இலங்கையில் அமைவிடங்கள் முக்கியமாக 05 மலை த்தொடர்கள் தொடர்புடைய வரைபடங்கள் அமெரிக்காவின் சிக்காக்கோ பல்கலை க்கழகத்தில் வைத்து ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இவற்றிற்கான பின்னணிக்காரணங்கள் நிறையவே இருக்கின்றன. இவ்வாறான செயற்திட்டங்களை அமெரிக்கா மட்டுமல்ல இந்தியரசும் மேற்கொண்டுவருகின்றது. அதிகமான அதிகாரம் அமெரிக்காவின் கையிலிருப்பதாலும், சுயாதீனமாக செயற்படுவதற்கு அவர்களுக்கு முடிகின்றது. இந்தியாவையும் இலங்கையையும் எடுத்துக்கொண்டால் இந்தியாவில் ஒரு மாநிலமே இலங்கையிலுள்ள சனத் தொகையாகக் காணப்படுகின்றது. 29 மாநிலங்களைக்கொண்ட இந்தியரசானது நூற்றி இருபத்தைந்து கோடி சனத் தொகையைத் தாண்டியுள்ள இந்நிலை யிலும், 593 மாவட்டங்களை உள்ளடக்கி யும், 7இலட்சம் கிராமங்களை உள்ளடக்கி யும், 1652மொழிகளைக் கொண்டும், 4535 இனங்களைக் கொண்டும் காணப்படுகின்றது. தனி மாநிலங்களாக வடக்கு கிழக்கினைப் பிரித்து கூட்டமைப்பின் கையில் வழங்குவதற்கு இலங்கையரசு தயாராகவில்லை.


அண்மையில் வடமாகாண சபை முதலமைச்சரின் கருத்தின்படி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தமக்கு அளித்த இரண்டு வாக்குறுதிகளில் அவையிரண்டும் நிறைவேற்றப்படவில்லை. அதில் ஒன்று வடமாகாண ஆளுநர் இராணுவத்தினர் அல்லாத ஒருவரை நியமிப்பதாக மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் ஒரு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறு இதுவரை நடைபெறாது மீண்டும் அவரையே நியமிக்கும் நிலைமை தோன்றியுள்ளது. யுத்தத்தை முன்னெடுப்பதனூடாக இலங்கையில் என்று இல்லாதவாறு நடைபெற்ற யுத்தமாகவே இனி ஒரு யுத்தம் அமையப்பெறும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதனைமாற்றியமைக்க அமெரிக்காவின் காலில் விழுவதை விட இலங்கையரசிற்கு வேறு வழியுமில்லை. இனி நடைபெறுகின்ற தாக்குதல்கள் ஒவ்வொன்றும் தொழில்நுட்ப ரீதியாகவே நடைபெறும்.



**நெற்றி பொறியன்**

# இலங்கையின் தேசியவாதத்திற்கு அச்சுறுத்தலாக சீனா, இந்தியா, அமெரிக்கா



இன்றைய பூகோள அரசியலின் நிலைமையின்படி கொரோனா வைரஸ் நாடுகளில் தாக்கத்தை செலுத்தியுள்ள பொழுதும் குறித்த நாடுகள் (சீனா, இந்தியா, அமெரிக்கா) உலகளாவிய ரீதியில் தமது சர்வதிகார போக்குகளை கடைப்பிடித்து வருகின்றமையானது இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

குறிப்பாக சீன அரசாங்கமானது உலகளாவிய ரீதியில் தனது இராணுவ அரசியல் ரீதியான அரசியலை திணிக்கின்ற அதே நேரம் பொருளாதார கட்டமைப்பிலும் தன்னை வலப்படுத்த வேண்டும் என்ற எதிர்கால திட்டத்தை நோக்கியே சீனா அரசாங்கம் செயற்படுகிறது. அதற்கு சற்றிலும் சளைத்தவர்கள் அல்ல என இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் செயற்பட்டு வருகின்றமையானது இலங்கையில் சர்வதேச ரீதியிலான மற்றுமொரு தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற செயற்பாடாகும். பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் வளர்ச்சியடையக்கூடாது என்பதில் சீனா, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் செயற்படுகின்றன.

இலங்கை நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தனது நாட்டுக்குள் தன்னிறைவு பொருளாதாரத்தை நிறைவுபெற செய்ய வேண்டும் என்பதில் அயராது செயற்படுவது என்பது பாராட்டத்தக்கது. இந்த தன்னிறைவு பொருளாதாரத்தை குறித்த நாடுகள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுமதி, இறக்குமதி போன்ற விடயங்களில் பாரியளவில் செயற்படுகின்ற இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் ஒருசில பொருட்களுக்கு இறக்குமதி தடை விதித்திருப்பதானது அரசியல் ரீதியாகவும், பூகோள ரீதியாகவும் பாரிய நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. ஒரு நாடு தன்னிறைவு பொருளாதாரத்தை சரியாக கட்டியெழுப்புமேயானால் அந்த நாடு ஒரு முன்னேற்றகரமான நாடாக திகழும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

குறிப்பாக கொரோனா வைரசை பரப்பிய சீனா இன்று சர்வதேச ரீதியாக தனது நாடு தன்னிறைவு பொருளாதாரத்தை நிரப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவிட்டது எனலாம். திறந்த பொருளாதாரத்தினூடாக ஒரு நாடு கடன் சுமைக்குள்ளாகும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதுமட்டுமன்றி இந்த கொரோனா வைரசின் தாக்கத்தினூடாக மேற்குறிப்பிட்ட நாடுகள் இலங்கையில் தமது புலனாய்வு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றார்கள். அதிலும் குறிப்பாக இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை, கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளை சீனா அரசாங்கம் தற்பொழுது ஓரளவு தன்வசப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் 10 வருடங்களில் (little Chaina) என்ற ஒரு நகரம் இலங்கையில் ஸ்தாபிக்கப்படும் என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை. இலங்கையில் இருக்கக்கூடிய தாமரை தடாகத்தை எவரும் தாமரை தடாகம் என்று கூறுவதில்லை. குறிப்பாக சீன டவர் என்றே கூறுவார்கள் அந்த அளவிற்கு நிலைமை மாறியுள்ளது. அதுமட்டுமன்றி சீன அரசாங்கத்துடன் இலங்கை அரசு நட்புறவை பேணி வந்துள்ளது. அதிலும் குறிப்பாக கோட்டபாய ராஜபக்ச அவர்கள் சீன அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தியுள்ளார். இதனால் தனது அரசியல் பயணத்தை தொடர்ந்தும் பயணிக்கலாம் என்ற நட்பாசையுடன் இவருடைய அரசியல் பயணம் தொடங்குகின்றது.

இந்தியாவை பொறுத்தவரையில் இலங்கையில் மாகாண சபையை நிறுவி அதனூடாக தனது அரசியல் நகர்வுகளை நகர்த்தலாம் என்று எண்ணிக் கொண்டிருக்க மாகாணசபை தேர்தலை நடத்தப்போவதில்லை என்று அரசாங்கம் கூறி வருகின்றது. மாகாணசபை தேர்தல் தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று மக்கள் தொடர்பாடல் அமைச்சர் சரத்வீரசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கும் கருத்தானது வடகிழக்கில் இருக்கின்ற தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. மாகாணசபைகள் இயங்குவதாக இருந்தாலும் கொரோனா வைரஸ் காரணம் காட்டி இந்த தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதுஎன்றவாதத்தினையும் அரசாங்கம்முன்வைத்துள்ளது. கொரோனா வைரஸ் இந்தியாவில் அதிகரித்து வந்த நிலையிலும் அங்கு சட்டசபை தேர்தல் இடம்பெற்று முடிந்துள்ளது. இலங்கையிலும் கொரோனா இருந்த காலப்பகுதியிலும் பொதுத்தேர்தல் நடந்து முடிந்தது.

ஆகவே மாகாணசபை தேர்தலையும் கொரோனா விதிமுறைகளுக்கமைய அரசாங்கம் நடத்த முடியும். ஆனாலும் இந்தியாவினுடைய அரசியல் காய் நகர்விற்கு அடிபணியப்போகின்றது என்ற ஒருநிலைப்பாட்டிலேயே இலங்கை அரசியல் தனது நகர்வுகளை காய் நகர்த்துகின்றது. இந்தியாவின் தமிழ் நாட்டில் தி.மு.காவிற் வெற்றி இலங்கையில் ஒரு மாற்றத்தை கொண்டுவருமா என்ற கேள்வி பாரியளவில் எந்தவொரு மாற்றத்தை கொண்டுவரப் போவதில்லை என்பதே யதார்த்தபூர்வமான உண்மை. இருந்தும் இந்தியாவை தவிர்த்து இலங்கையில் அரசியல் செய்யமுடியாது என்ற ஒரு நிலைப்பாடு இருக்கிறது. குறிப்பாக கச்சைதீவை இந்திய அரசாங்கம் கைப்பற்ற நினைக்குமாக இருந்தால் அரசியல் ரீதியான போராட்டங்களை சந்திக்க வாய்ப்புக்கள் இருக்கின்றன. எது எவ்வாறாக இருப்பினும் தமிழ் மக்கள் தீர்க்கப்படாத வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் போன்ற பிரச்சனைகள் இருக்கின்றன. யுத்தம் முடிவடைந்து 11 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் பயங்கரவாத தடைச்சட்டம் இன்னமும் இந்த நாட்டிலிருந்து மீட்கப்படவில்லை. சிங்கள குடியேற்றம் என்ற போர்வையில் வடகிழக்கில் நில ஆக்கிரமிப்பு இடம் பெறுகின்றது. பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் ஒரு தீர்வு எட்டப்படவேண்டுமாக இருந்தால் இலங்கை பாராளுமன்றத்தில் இருக்கக் கூடிய தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களால் இயலாத காரியம்.

ஆகவே மாகாணசபையின் அதிகாரங்களை பலப்படுத்துவதன் ஊடாகவே ஓரளவேனும் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டத்தை பெற்றுக்கொள்ள முடியும். போருக்கு முன்னரான பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற அரசியல் வேறு. போருக்கு பின்னரான காலப்பகுதிகளில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களுடைய அரவழிப்போராட்டம் இன்னும் தொடர்கிறது. இவற்றிற்கான தீர்வினை பெற்றுக்கொடுப்பதில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை என்பதேயாகும்.

இவ்வாறான நிலைமை தொடருமாக இருந்தால் ஏதோவொரு நாட்டின் உதவியுடன் தமக்கான தனி அலகை கோருகின்ற ஒரு நிலைமை உருவாக்கப்படும். இலங்கையில் ஆதிக்கம் செலுத்துகின்ற குறித்த நாடுகள் மீளவும் இலங்கையில் போராட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை திரைமறைவில் மேற் கொண்டு வருகின்றார்கள். இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை மூடி மறைக்கப்பட்டதொரு வரலாறு இன்னமும் தொடர்கிறது. ஆகவே சர்வதேச ரீதியிலான அழுத்தங்களை இந்த நாட்டில் குறைப்பதற்கு வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை தமிழ் மக்களுக்கு இலங்கை அரசு வழங்க வேண்டும். இல்லையேல் சர்வதேச நாடுகள் தமது புலனாய்வு நடவடிக்கைகள் மூலம் இலங்கையை ஆக்கிரமிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற் கொள்ளப்படலாம்.




-மறவன்-

# பெண்களும் உளவியல் முரண்பாடுகளும்



கடந்தவார தொடர்ச்சி...

"தாயுரிமை தூக்கியெரியப்பட்டது பெண்ணினம், உலக வரலாற்று ரீதியில் பெற்ற தோல்வியாகும். வீட்டிலேயும் ஆட்சிச் சுதந்திரத்தை ஆண் கைப்பற்றினான் பெண் இழிநிலைக்குத் தள்ளப்பட்டாள் ஆணின் காம இச்சைக்கு அடிமையானாள் கேவலம் குழந்தை பெறும் சாதனமாக ஆகிவிட்டாள்.

4. வடக்கு மாகாணத்தில் கல்வி கற்ற ஆடவர்கள் பணத்திற்காகவும் சமூகத்தில் அந்தஸ்திற்காக, குழந்தையைப் பெற மனைவியைப் பயன்படுத்திவிட்டு, பின்னர் பணம் கேட்டு கொடுமைப்படுத்துவதையும் விவாகரத்துப் பெறுவதையும் காணலாம். சான்றுகளாக, அண்மையில்வைத்தியரின்மனைவி கிளிநொச்சியில் இவ்வாறான கொடுமைக்கு உள்ளாகி தற்கொலை புரிந்தமையையும் வைத்திய நிபுணர் ஒருவரின் கொடுமைக்கு உள்ளாகிய நடன ஆசிரியர் விவாகரத்துப் பெற்றமையையும் குறிப்பிடலாம். வடக்கு மாகாணத்தில் இவ்வாறன சம்பவங்கள் பல. இதனால், படித்த பெண்களும் பணக்கார பெண்களும் பலர் பலவிதமான உள நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் பெருமபான்மையான சமூகமாக தமிழ்ச் சமூகம் திகழ்கின்றது. அந்த சமூகத்தில் பெண்களின் திருமணம், திருமணத்திற்காக வழங்கப்படும் சீதனம் - ஆடவர் மீது கொண்ட பயம் - என்பன இளம் பெண்களின் திருமணத்தைப் பிற்போட வைத்துள்ளது. இதனால், திருமண வயதைக் கடந்த பெண்கள் பலர் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் உள்ளனர்.

5. இவர்களுக்கு, வயதான பெற்றோர்களைப் பராமரித்தல், ஊனமுற்ற உறவினர்களைப் பாதுகாத்தல், அநாதைகளாக இருத்தல் என பொறுப்புக்கள் பல. காணிப் பிரச்சினை, பொலிஷ் நிலையங்களில் முறைப்பாடு செய்வதற்கு சென்றால், மொழி ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் எதிர் கொள்ளும் சவால்கள், போக்குவரத்துப் பொலிஷார் சிங்கள மொழியில் கதைத்து பணம் பறித்தல், நீதிமன்றங்களுக்குச் சென்றால், அந்தரங்கமான விடயங்களை எமது பண்பாட்டுக்கு மாறாக கேட்டல் என மேலதி உளச் சுமைகளுக்கு உள்ளாகியுள்ளனர். இன்று வடக்கு மாகாணத்தில் உள்ள முதலாளித்துவ சமூகத்தில் பாலியல் பிரசாரமாக, பாலியல் விற்பனை பண்டமாக, பெண் விபச்சாரியாக , அடிமையாக வாழ்தல், பெண்கள் பிள்ளைகள் பெறும் கருவியாக நோக்குதல் முதலிய கருத்தியலால் பெண்கள் உளவியல் முரண்பாடுகளுக்கு அதிக அளவில் முகம் கொடுத்து வருகின்றனர். இவை அனைத்தையும் சோஷலிச சமூகத்தில் எதிர் பார்க்க முடியாது' பாலியல் பிரசாரம் இல்லாத' பாலினத்திற்கு அளிக்கப்பட வேண்டியப பங்கும் மதிப்பும் உணர்வுடன் வழங்கப்பட்டு, பெண் விபசாரியாக , அடிமையாக - இல்லாமல் விடுதலைப் பெற்று சுதந்திரமாக வாழ முடியும்.

அழகும், கவர்ச்சி, அழகு சாதனங்கள், தங்க ஆபரணங்கள், காதல் முதலியவற்றின் உண்மை நிலையைப் பெண்கள் அறிந்துகொள்ள வேண்டும். புற அழகுக் கவர்ச்சியிலும் பார்க்க அக அழகைப் பெண்கள் வளப்படுத்த வேண்டும். 'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்' - ஆளுமையும் சமத்துவமும் சிறந்தவை. முதலாளித்துவ விற்பனைப் பண்டங்களான அழகு சாதனப் பொருட்களில் மதி மயங்கி விடக்கூடாது. தமக்கு வசதியும் மகிழ்வும் தரக்கூடிய ஆடைகளை அணியலாம். ஆண்களின் பார்வைக்கு அணிவதைத் தவிர்க்கலாம். ஆண்களின் உடை பெண்களுக்கு வசதியும் சமத்துவமும் தரவல்லது.

6. வடக்கு மாகாணத்தில் அதிக அளவில் ஆடம்பர புடவை மாளிகைகளும்தங்கமாளிகைகளும் முக ஒப்பனை நிலையங்களும் பெண்களை சிந்திக்க விடாமல் தடுத்து, தமது வணிகத்தை ஆபாசமான விளம்பரங்கள் மூலம் எமது சமூகத்தில் புகுத்தி பெண்களைப் போட்டி, பொறாமை சூழலுக்குள் தள்ளி அழகு என்ற பதத்தைப் பயன்படுத்தி உள நேயாளர்களாக்கியுள்ளனர். இதை பெண்களே, உணந்து வெளியில் வந்தால், விமோசனம் உண்டு இல்லாவிடின் வெளி நாட்டு கழிவுப் பொருட்களை விற்கும் இடமாக வடக்கு மாகாணம் திகழும்.

சமூகத்தில் பெண்களின் அந்தஸ்தும் அவர்களது வாழ்வியல் அம்சங்களும் மேம்படுதல் சமூக மாற்றத்தின் மிக முக்கியமான அம்சமாகும். வாழ்வியல் அம்சங்கள் மேம்படுதல் என்பதன் பொருள் பெண்களுக்கு சமவாய்ப்புக்களும் சமசந்தர்ப்பங்களும்வழங்கப்படுதல் ஆகும். இதன் மூலம் பெணணின் உரிமைகளும் சுதந்திரமும் சிறப்பாக இருப்பதை உறுதி செய்யலாம். பெண்களின் கல்வி முன்னேற்றம், அவர்களின் சுகாதாரமும் ஆரோக்கிய நிலையும் மேம்படுதல் என்ற இரு விடங்களையும் எடுத்துக்காட்டக் கூடிய குறிக்காட்டிகள் சில உள்ளன.

7. வடக்கு மாகாணத்தில் ஒரு பெண் தாய்மையடைவதற்கு முன் அறிந்திருக்க வேண்டிய விடயங்களான:- பெண் சட்ட ரீதியாக 18 வயதைப் பூர்த்தியடைந்திருத்தல், தகுந்த உடல், உள, சமூக ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல், குழந்தை வளர்ப்பிற்கு உரிய குடும்ப பொருளாதாரச் சூழ்நிலை, இரத்த உறவினரிடையே திருமணம் புரிவதால் சில பரம்பரை நோய்கள் அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படுதல், குழந்தைகளுக்குக் குறைபாடுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு போலிக் அமிலம் கொண்ட மாத்திரைகளை உட்கொள்ளல், சிறிய வயதில் பெண்களுக்குப் போடப்படும் கருப்பைக் கழுத்துப் புற்று நோய் ருபெல்லா நோய்கள் தடுப்பூசிகளை உரிய வயதில் பெறல், கருத்தரிப்பதற்கு முன்னர் வைத்திய ஆலோசனைப் பெறல் முதலிய விடயங்கள் பற்றிய சரியான விழிப்புணர்வுகள் இன்மையால், கருவுற்ற பெண்களும் குழந்தையை ஈன்றெடுத்த தாய் மாரும் சரியான தாங்குதிறன் இன்மையால் பல உள நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர்.

நவீன உலகில் அனைத்து உணவுகளும் வியாபாரத்தின் பொருட்டு, இரசாயன பதார்த்தங்கள் கலக்கப்படுகின்றன. பெண்கள் விரதம், நோன்பு முதலியவற்றின் விளக்கங்களைத் தவறுதலாக புரிந்த பெண்கள் தொடர்ச்சியாக உபவாசம் இருந்து ஆரோக்கியமான உணவு களை உண்ண தவறுகின்றனர். இதனால், உடலுக்கு சக்தி, வளர்ச்சி, நோய் எதிர்ப்பு முதலியன தடைப்படுகின்றன. இவ்வாறான ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளாத பெண்கள் பாலியலில் நாட்டமின்மை, கருவுறாமை, கருச்சிதைவு, இயற்கையாக சிசுக்கள் பிறக்காமல் சிசேரியன் சிகிச்சைக்கு உள்ளாகி வாழ் நாள் முழுவதும் துன்புறுதல் முதலிய உபாதைகளுக்கு உள்ளாகின்றமையால், வாழ்க்கையில் விரக்தியின் விளிம்பிற்குச் செல்கின்றனர்.

பொருளாதார ரீதியாக உழைத்து வாழும் பெண்கள் கூட உளவியல் ரீதியாக அடிமையாக வாழ்கின்றனர். அடிமை உணர்வுகள் - மூடநம்பிக்கைகள் - சிறுவயதிலிருந்தே ஊட்டப்பட்டவர்கள். உளவியல் ரீதியாக அடிமை உணர்வில் இருந்து விடுபட - சுதந்திர காற்றைச் சுவாசிக்க - முடியாதவர்களாக இருக்கின்றனர். பெண்கள் சிறந்த ஆளுமையுள்ளவர்களாக சுதந்திரமாக சிந்திக்கக் கூடியவர்களாக தீர்மானம் எடுக்கும் திறன் உள்ளவர்களாக உருவாக்குவதற்கு கல்வி அறிவுடன் சிறுவயதிலிருந்தே தன்னம்பிக்கை , உயர்வான எண்ணங்கள் - ஊட்டப்பட்டு, உளவியல் ரீதியான பலத்துடன், வளர்க்கப்பட வேண்டும்.

பருவம் அடையும் போது உடல் அடிப்படையில் பெண்ணைத் தனிமைப்படுத்தி, அந்நியப்படுத்தும் பயமுறுத்தும் கீழ் நிலைப்படுத்தும் குடும்பக் கருத்தியல் நேரடியாக நடைமுறைக்கு வருவதால், பெண்ணாணவள் உளவியல் ரீதியாக தனிமைப்படுத்தப்படுகின்றாள். இதனால், பொறுமை இழந்த இயற்கை பாகுபாடுகள் பார்க்காமல் கொரோனா மூலம் அனைவரையும் தனிமைப்படுத்தியுள்ளது. பெண் பருவமடைந்ததும் மாதவிலக்கு என்று கூறி மூலைக்குள் தள்ளப்படுகினறாள். மாதவிலக்கு நாட்கள் தீண்டாத்தகாத நாட்களாக்கி, அந்நாட்களில் அவள் அசுத்தமானவள் பலவீனமானவள், மங்கல நிகழ்வுகளிலிருந்து ஒதித்திவைத்தல், பூப்புனித நீராட்டு விழா என்ற பெயரில் பெண்ணை கேளிக்கைக்கு உள்ளாக்கி அறிவு சீரழிந்த பண்பாட்டைக் கட்டிக்காத்தல் என இன்னோரன்ன செயற்பாடுகளையும்சுமைகளையும் பெண்கள் மீது ஏற்றி அவர்கள் உளவியல்ரீதியாகசமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

பொதுவாக உளநெருக்கீடுகள் என்று வருகின்ற போது, பெரும்பாலும் பாதிக்கப்படுவது பெண்கள் தான் என்ற கருத்தியல் உண்டு. பெண்கள் தமது சமூக பழக்கவழக்கங்களால், அதிகளவு குடும்ப மற்றும் உறவினர்களுடன் இணைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த இணைப்பு பல காரணிகளால் வலுக்கட்டாயம் அறுக்கப்படும்போது - இடைவெளி , ஏற்படும்போது அவளது உள்ளம் ஊனம் அடைகின்றது.

8. வடக்கு மாகாணத்தில் பெண்கள் தனிக்குடித்தனம் செல்லும் போது, வாழ்க்கைக்கு தன்னைத் தயார்படுத்தல் இல்லாத நிலையில் பல இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது.

இம் மாகாணத்தில் பெண்கள் சுரண்டப்படுவதைக் கண்கூடாகவே காணமுடியும். குடும்ப பொருளாதரத்தின் நிமிர்த்தம் கல்வியைத் தொடரமுடியாத யுவதிகள் பல்பொருள் வாணிபம், விசேட அங்காடி, தியாகி அறக்கட்டளை அங்காடி, புடவைக்கடை, நகை மாளிகை, சாப்பாட்டுக்கடை, மருந்தகம், அச்சகம், தனியார் கல்விநிலையங்கள், முன் பள்ளிகள், பத்திரிகைநிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் முதலிய இடங்களுக்கு தொழில் தேடி செல்கின்றனர். வேலை பழக்குதல் என்று கூறி ஊதியம் இல்லாமல் வேலை வாங்குதல், சேமநலநிதி கட்டப்டாமல் வேலை வாங்குதல்,

தொடரும்...

**புயல் நேசன்**



# பிராந்திய செய்தி



## திருகோணமலையில் கோர விபத்து - ஒருவர் காயம்!

திருகோணமலையில் இடம்பெற்ற கோரவிபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

டிப்பர் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதனாலேயே அன்று(சனிக்கிழமை) காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.




இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

டிப்பரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நயினாதீவில் நடைபெறவிருந்த அரச வெசாக் நிகழ்வு இரத்து!

யாழ்ப்பாணம், நயினாதீவு ரஜமஹா விகாரையில் நடைபெறவிருந்த அரச வெசாக் நிகழ்வை இரத்துச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அச்சநிலையைக் கருத்திற்கொண்டு இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரச வெசாக் நிகழ்வை வேறு இடத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



## 64 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் விடுவிப்பு

நாட்டின் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவினால் இதுகுறித்த உத்தியோகப்பூர்வ அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய, குருணாகலை மாவட்டத்தின் குளியாப்பிட்டி பொலிஸ் அதிகாரப் பிரிவிற்குட்பட்ட 82 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 63 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இத்தருணம் முதல் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் உஹன பொலிஸ் அதிகாரப் பிரிவிற்குட்பட்ட குமாரிகம கிராம உத்தியோகத்தர் பிரிவும் இத்தருணம் முதல் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.




## சமையல் எண்ணெய்யில் கலப்படத்தைத் தடுக்கும் விசேட வர்த்தமானி வெளியானது!

இலங்கையில் சமையல் எண்ணெய்யை வேறு எண்ணெய் வகையுடன் கலப்படம் செய்வதைத் தடுக்கும் வகையிலான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த திஸாநாயக்கவின் கையெழுத்துடன் இந்த வர்த்தமானி வெளியாகியுள்ளது.



2003ஆம் ஆண்டு ஒன்பதாம் இலக்க நுகர்வோர் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஏழாம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதில், சமையலுக்கு உகந்த தேங்காய் எண்ணெய்யை வேறு எந்தவொரு எண்ணெய் வகையுடனும் கலப்படம் செய்யாமல் மொத்தமாகவோ, சில்லறையாகவோ விற்பனை செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதியாளர்கள், சுத்திகரிப்பாளர்கள் உள்ளிட்ட எண்ணெய் விநியோகத்துடன் தொடர்புடையவர்களுக்கு இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 617 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் 617 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அன்று(சனிக்கிழமை) காலை 6 மணிக்கு நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.




முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியை பேணாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## வடக்கில் மேலும் 20 பேருக்குக் கொரோனா தொற்று!

வடக்கு மாகாணத்தில் மேலும் 20 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆகிய இரண்டு ஆய்வுகூடங்களில் 668 பேரின் மாதிரிகள் அன்று (வெள்ளிக்கிழமை) பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்படி, யாழ். மாவட்டத்தில் 18 பேருக்கும் கிளிநொச்சி மற்றும் மன்னாரில் தலா ஒருவருக்கும் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில், யாழ். போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த மூவருக்கும் யாழ். சிறைச்சாலையில் ஒன்பது பேருக்கும் தெல்லிப்பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட ஐவருக்கும் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், சுன்னாகம் பவர் ஸ்ரேசன் பகுதியில் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் ஒருவருக்கும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும் மன்னார் பொது வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும் கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக மருத்துவர் கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

# சினி துளிகள்

## நடிகை த்ரிஷாவிற்கு அடுத்த ஆண்டில் திருமணமா?

தமிழ் சினிமா ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்திருப்பவர் நடிகை த்ரிஷா. அனைவரின் கனவுன் கன்னியாக இன்னும் மக்களின் மத்தியில் பேசப்படுகிறார். அவ் வப்போது சில படங்களே அவரது நடிப்பில் வெளியாகி வருகின்றன. அவரும் பெரிதாக அதிக படங்கள் கமிட்டாவது இல்லை.

கடந்த மே 4ம் திகதி த்ரிஷாவின் பிறந்தநாள். ரசிகர்கள் முதல் பிரபலங்கள் வரை அனைவரும் வாழ்த்து கூறி வந்தார்கள். த்ரிஷா வாழ்த்தியவர்களுக்கு நன்றி கூறி விட்டு இப்போது கொண்டாடும் சூழல் இல்லை. மக்கள் அவதிப்பட்டு வரும்போது கொண்டாடுவது சரியான விஷயம் இல்லை என பதிவு செய்திருந்தார்.

இவரது பிறந்தநாளுக்கு வாழ்த்து கூறிய நடிகை சார்மி, த்ரிஷாவுக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறிவிட்டு, இதுவே உனது கடைசி Bachelor பிறந்தநாள் என கூறியுள்ளார். எனவே நடிகை த்ரிஷாவின் திருமண பேச்சு ரசிகர்களிடம் கிசுகிசுப்பாக பேசப்பட தொடங்கி யிருக்கிறது.



## முன்னணி நடிகை சமந்தாவின் சொத்து மதிப்பு இத்தனை கோடியா?

தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் முன்னணி கதாநாயகியாக வலம் வரும் நடிகை சமந்தா. தமிழில் முன்னணி நடிகர்களான விஜய், சூர்யா, தனுஷ் போன்ற முன்னணி நடிகர்களின் படங்களில் நடித்து திருமணத்திற்கு பிறகும் தமிழில் மார்க்கெட் இலாகாத நடிகையாக இருக்கிறார். ஆம் கடந்த 2017ஆம் ஆண்டு தெலுங்கு நடிகர் நாக சைதன்யாவை காதலித்து திருமணம் செய்து கொண்டார் நடிகை சமந்தா.

இந்நிலையில், சமந்தா - நாக சைதன்யா தம்பதியின் சொத்து மதிப்பு குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி சமந்தா - நாக சைதன்யா தம்பதியின் மொத்த சொத்து மதிப்பு ரூ.122 கோடியாம். இதில் சமந்தாவின் சொத்து மதிப்பு மட்டுமே சுமார் ரூ.84 கோடி என்றும், நாக சைதன்யாவின் சொத்து மதிப்பு ரூ.38 கோடி என்றும் கூறப்படுகிறது.



## ஹிந்தியில் ரீமேக் ஆகும் விக்ரம் வேதா



புஷ்கர் - காயத்ரி இயக்கத்தில் மாதவன், விஜய் சேதுபதி நடிப்பில் 2017ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் 'விக்ரம் வேதா'. ரசிகர்கள் மத்தியில் பிளாக் பஸ்டர் ஹிட்டான இப்படத்தை ஹிந்தியில் ரீமேக் செய்ய திட்டமிட்டனர். மாதவனாக சயீப் அலிகானும், விஜய் சேதுபதியாக அமீர் கானும் நடிப்பதாக இருந்தது. பின்னர் அமீர் கான் இப்படத்திலிருந்து விலகினார். அவருக்கு பதிலாக ஹிருத்திக் ரோஷன் இப் படத்தில் விஜய் சேதுபதி கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமானார்.

ஆனால் தற்போது நடிகர் ஹிருத்திக் ரோஷன், கொரோனா பரவல் குறைந்ததும் தொடர்ந்து பைட்டர், கிரிஷ் 4 உள்ளிட்ட படங்களில் நடிக்க கால்ஷீட்டை ஒதுக்கி யுள்ளார். இதனால் விக்ரம் வேதா ரீமேக்கிற்கு கால்ஷீட் ஒதுக்க முடியாத சூழல் உருவாகி உள்ளதால், அவர் இப்படத்தில் இருந்து விலக உள்ளதாக கூறப்படுகிறது. இந்த தகவல் ஹிருத்திக் ரோஷனின் ரசிகர்களுக்கு பெரும் ஷாக்கிங்காக அமைத் துள்ளது.

## பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியலில் புதிதாக வரப்போகும் நடிகை




விஜய் தொலைக்காட்சியின் ஹிட் சீரியல்களில் ஒன்று பாண்டியன் ஸ்டோர்ஸ். அண்ணன்-தம்பிகள் என்றால் இவர்களை போல இருக்க வேண்டும் என்று எல்லோருமே ஆசைப்படுகிறார்கள்.

ஆனால் நிஜத்தில் எத்தனை அண்ணன்-தம்பிகள் இப்படி வாழ்கிறார்கள் என்பது தெரியாது.


இந்த சீரியலில் கடந்த சில வாரமாக சந்தோஷமாக நிகழ்வுகளாக நடந்து வருகிறது. மக்களும் ரசித்து வருகிறார்கள்.

ஆனால் இப்போது சீரியலில் ஒரு புது என்ட்ரீ வரப்போகிறார். புதிதாக வருபவர் என்று கூற முடியாது. காரணம் அண்மையில் மூர்த்தி திருமணம் பற்றிய பிளாஷ்பேக் காட்சி காட்டப்பட்டது.

அதில் மல்லியாக நடித்த நடிகை இப்போது மீண்டும் சீரியலில் வரப்போகிறார். இனி வரும் காலங்களில் அவரது டிராக் காண்பிக்கப்பட இருக்கிறது.




# பல்சுவை விருந்து



## முகத்தில் உள்ள கரும்புள்ளிகளை நீக்கி பொலிவுறச்செய்யும் கற்றாழை ஜெல் !!

தினமும் காலையில் வெறும் வயிற்றில் கற்றாழை ஜூஸ் குடித்து வந்தால், உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

கற்றாழையின் மடலில் உள்ள சாறை எடுத்து தேங்காய் எண்ணெய் கலந்து 40 நாட்கள் தலை முடியில் தேய்த்தால் கூந்தலின் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.



கற்றாழை ஜெல் பயன்படுத்துவதால் தோல் மிருதுவனதாக இருக்கும். முகப்பரு மற்றும் எண்ணெய் வழியும் முகத்தை தடுக்கவும் இந்த கற்றாழை பயன்படுகிறது.

காற்றாழையில் இருந்து நேரடியாக அதன் ஜெல்லை எடுத்து முகத்தில் பயன்படுத்தலாம். இல்லையென்றால் கடைகளில் விற்கும் கற்றாழை ஜெல்லையும் வாங்கி பயன்படுத்தலாம்.

இரத்த அழுத்த பிரச்சனை இருப்பவர்கள், கற்றாழை ஜூஸை தினமும் குடித்து வந்தால், உடலின் இரத்த அழுத்தத்தை சீராக வைத்துக் கொள்ளலாம். கற்றாழை ஜெல்லை மோரில் கலந்து குடித்தால் உடல் சூடு குறையும். அலர்ஜி, கருந்திட்டுக்கள் மறைந்து போகும்.

கண்களில் அடிபட்டதாலோ, இதர காரணங்களாலோ கண் சிவந்து வீங்கியிருந்தால் கற்றாழைச் சோற்றை வைத்துக் கட்டி இரவு தூங்கினால் வலி குறையும். மூன்று தினங்களில் நோய் குணமாகும்.

கற்றாழையின் ஜெல் உங்களது முகத் தோலில் படிந்துள்ள கரும்புள்ளிகளை நீக்கி பொலிவுறச் செய்யும். மேலும், முகப்பருக்களை கட்டுப்படுத்தக் கூடிய வல்லமை கொண்டுள்ளது.

முகத்திலுள்ள கரும்புள்ளிகள், தழும்புகள், வெயில் பாதிப்புகள், உலர்ந்த சருமம் என சரும நோய் எதுவாக இருந்தாலும், சிறிது கற்றாழைச் சாற்றைத் தினமும் தடவி வர நல்ல குணம் கிடைக்கும். இதன் சாற்றை இரவு வேளையில் முகத்தில் தேய்த்து காலையில் வெந்நீரால் கழுவ முகத்தில் உள்ள கருமை நீங்கி முகம் பொலிவுபெறும்.

## வறண்ட சருமத்தை புதுப்பொலிவடைய செய்யும் குறிப்புகள் !!

அரிசி மாவுடன், வெள்ளரிச்சாறு மற்றும் தேன் சேர்த்து நன்கு கலக்கி, முகத்தில் தடவி, சிறிது நேரம் உலர வைத்து பின்பு கழுவினால், வறண்ட சருமத்திலிருந்து விடுதலை கிடைக்கும்.

அப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.

மோரை முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவினால் வறண்ட சருமம் புதுப் பொலி வடையும்.

பழுத்த வாழைப் பழத்தை நன்றாகப் பிசைந்து முகத்தில் தடவி, 20 நிமிடம் கழித்து கழுவினால், சருமம் மிகவும் மிருதுவாகும்.

ஒரஞ்சு பழத்தோல் பொடியுடன், பால் கலந்து சருமத்தில் தடவி அரைமணி நேரம் கழித்து கழுவி வந்தால், வெயிலில் ஏற்பட்ட கருமை மறையும்.

பால், கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

தேங்காய் பாலுடன் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து முகத்தில் ஐந்து நிமிடம் மசாஜ் செய்தால் சோர்வடைந்து சருமம் புத்துணர்ச்சி பெறும்.

தக்காளி பழத்தை இரண்டாக நறுக்கி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும். தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஆலிவ் ஆயிலைப் பூசி, சிறிது நேரம் ஊறவைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.



## தினமும் வெந்தயத்தை ஊறவைத்து சாப்பிடுவதால் உண்டாகும் பயன்கள் !!



வெந்தயத்தை தினமும் சாப்பிட்டு வந்தால், உடலில் தங்கும் கெட்ட கொழுப்பு நீக்கும். மேலும் கொழுப்பு நிறைந்துள்ள உணவில் இருக்கும் டிரைகிளரசைட் என்ற கொழுப்பினை ரத்தத்தில் சேர்க்காமல் பாதுகாக்கும்.

வெந்தயத்தில் உள்ள புரதம் மற்றும் நிக்கோடினிக் முடி உதிர்வதைத் தடுப்பதும் மட்டுமில்லாமல் பொடுகு பிரச்சனையில் இருந்து பாதுகாக்கிறது. இதில் உள்ள லெசிதின் முடி வறண்டு போகாமல் இருக்கவும், பளபளப்பாகவும் மற்றும் முடியின் வேர் பகுதியை வலுவாக வைத்துக்கொள்ள உதவும்.

வெந்தயத்தை இரவே ஊறவைக்கவும். மறுநாள் அதை மிக்ஸியில் மைய அரைத்துக் கொள்ளவும். இதனை தலையில் தடவி பிறகு குளித்தால் தலைமுடி உதிர்வதை கட்டுப்படுத்தி முடி வலுவாக இருக்க உதவும்.

வெந்தயத்தை தயிரில் ஊறவைத்து அரைத்து தலையில் தடவினால் பொடுகு பிரச்சைன இருக்க ாது. முடியும் பளபளப்பாக இருக்கும். மருதாணியை தலையில் தடவும் முன் அதனுடன் சிறிதளவு வெந்தய பவுடரை சேர்த்து கலந்து தடவினால் முடி வறண்டு போகாமல் பாதுகாக்கும்.

வெந்தயத்தை, ஊறவைத்த தண்ணீரைக் கொண்டு தலைமுடி அலசினாலும் முடி பளபளப்பாகும். வெந்தயத்தில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ளதால், அது உடலில் உள்ள நச்சுத்தன்மையை நீக்கும் வல்லமை கொண்டது.

இருதய பிரச்சனை, மூட்டுவலி மற்றும் உடல் பருமன் போன்றவற்றுக்கு நல்ல மருந்து. இதனை தினமும் ஊறவைத்து சாப்பிடலாம். அல்லது அப்படியே தண்ணீர் கொண்டு முழுங்கலாம்.

நீரிழிவு பிரச்சனை உள்ளவர்களின் டயட்டில் ஏதாவது ஒரு வகையில் வெந்தயத்தை சேர்த்துக் கொள்வது அவசியம். இதனை பொடித்து மோருடன் கலந்து சாப்பிடலாம். பாலிசிஸ்டிக் ஓவரி பிரச்சனை உள்ள பெண்களும் இதனை சாப்பிட்டு வந்தால் பிரச்சனை நீங்கும்.

# தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : “உளமாற உறுதி” கூறி பதவியேற்றார்



**தமிழ்நாடு முதலமைச்சராக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றார்.**

ஆளுநர் மாளிகையில் நடக்கும் எளிய பதவி யேற்பு விழாவில் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் அவருக்கு பதவி உறுதி மொழியும், ரகசிய காப்பு உறுதிமொழியும் செய்து வைத்தார். ஆளுநர் பன்வாரிலால், 'ஐ எம். கே.ஸ்டாலின்' என்று ஆங்கிலத்தில் கூற, 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான் என்று தொடங்கி பதவியேற்பு உறுதி மொழியை வாசித்தார். திராவிட இயக்கத் தலைவர்களுக்கே உரிய முறையில் "உளமாற உறுதி மொழிகிறேன்" என்று கூறி பொறுப்பேற்றார்.

திராவிட இயக்கத் தலைவர்கள் இப்படி 'உளமாற உறுதி ஏற்கிறேன்' என்று கூறி பதவி யேற்கும் நடைமுறையை அறிமுகப்படுத்தியதற்கு முன்பு, பதவி ஏற்பவர்கள் இறைவனின் பெயரால் உறுதி ஏற்பது வழக்கம்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான்..... உளமாற உறுதி மொழிகிறேன்.

ஸ்டாலின் பதவியேற்றபோது அவரது மனைவி துர்கா ஸ்டாலின் கண்கலங்கினார். ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி பல்வேறு துறைகளுக்கான அமைச்சர்களும் பதவியேற்கிறார்கள்.

பதவியேற்கவந்த ஸ்டாலின் மகிழ்ச்சி ததும்ப காணப்படவில்லை. கொரோனா இரண்டாவது அலை தமிழ்நாட்டை மூச்சுத் திணறவைக்கும் இக்கட்டான நேரத்தில் அவரது அரசாங்கம் பதவியேற்பதால் ஏற்படுகிற மன அழுத்தம் அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று தெரிகிறது.

**அமைச்சர்கள் பதவியேற்பு**

ஸ்டாலினைத் தொடர்ந்து திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் (நீர்வளம்), க.பொன்முடி (உயர் கல்வி), ஐ.பெரியசாமி (கூட்டுறவு), கே.என்.நேரு (நகர்ப்புற வளர்ச்சி), எ.வ.வேலு (பொதுப்பணி, நெடுஞ்சாலை), எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் (வேளாண்மை), தங்கம் தென்னரசு (தொழில்), எஸ்.ரகுபதி (சட்டம்), சு.முத்துசாமி (வீட்டுவசதி), கே.ஆர்.பெரிய கருப்பன் (ஊரக வளர்ச்சி), தா.மோ.அன்பரசன் ( ஊரகத் தொழில்), வெள்ளக்கோவில் மு.பெ. சுவாமிநாதன் (செய்தி, விளம்பரம்), வி.கீதா ஜீவன் (சமூக நலம்), 'அனிதா' ராதாகிருஷ்ணன் (மீன் வளம்), ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் (போக்குவரத்து),, க.ராமச்சந்திரன் (வனம்), அர.சக்கரபாணி (உணவு), வி.செந்தில் பாலாஜி (மின்சாரம்), ராணிப்பேட்டை ஆர்.காந்தி (கைத்தறி, துணி நூல்), மா.சுப்ரமணியன் (மக்கள் நல்வாழ்வு), பெ.மூர்த்தி (வணிகவரி, பதிவு) ஆகியோர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

மேலும் எஸ்.எஸ்.சிவசங்கர் (பிற்படுத் தப்பட்டோர் நலன்), பி.கே.சேகர் பாபு (இந்து அறநிலையம்), பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் (நிதி, மனிதவளம்), சா.மு.நாசர் (பால் வளம்), 'அன்பில்' மகேஷ் பொய்யாமொழி (பள்ளிக்கல்வி), சிவ.வீ.மெய்யநாதன் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்), சி.வே. கணேசன் (தொழிலாளர் நலம்), த.மனோ தங்கராஜ் (தகவல் தொழில்நுட்பம்), செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ( சிறுபான்மையினர் நலன்) மா.மதிவேந்தன் (சுற்றுலா), என்.கயல்விழி செல்வராஜ் (ஆதிதிராவிடர் நலம்) ஆகியோரும் அமைச்சராகப் பதவியேற்று உறுதி மொழிந்தனர்.

பதவியேற்பின்போது... கடந்தஅதிமுக ஆட்சியின் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், பாமக தலைவர் ஜி.கே.மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மதிமுக பொதுச்செயலாளர் வை.கோ. உள்ளிட்டோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

புதிதாகப் பதவியேற்ற அமைச்சரவையின் முதல் கூட்டம் இன்று நண்பகல் நடை-பெற்றது. மா.சுப்ரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி 34 அமைச்சர்கள் பதவி யேற்றிருந்தாலும், இரு வேறு காரணங்களுக்காக மா.சுப்ரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் கவனத்தைப் பெற்றுள்ளனர்.

2006-11 காலகட்டத்தில் சென்னை மேயராக இருந்த மா.சுப்ரமணியன் தமது பதவிக் காலத்தில் எளிதில் அணுகக் கூடியவாராக இருந்தார் என்றும், மாநகராட்சிப் பள்ளிகளின் மேம்பாட்டுக்குப் பங்காற்றியவர் என்றும் பெயர் பெற்றவர். இடர் காலங்களில் களத்தில் இறங்கி செயல்படக்கூடியவர் என்று பெயர் பெற்ற இவர் தற்போதைய கொரோனா இடர் காலத்தில் மிகவும் எதிர்பார்க்கப்படும் சுகாதாரத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார். எனவே இவர் மிகவும் கவனிக்கப்படுகிறார். மிக மூத்த திமுக தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கத்தின் பெயரனும், முதல்வர் மு.க.ஸ்டாலின் நண்பரான அன்பில் பொய்யாமொழியின் மகனுமான இளம் அரசியல்வாதி மகேஷ் பொய்யாமொழிக்கு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

2006-11 திமுக ஆட்சியின்போது பள்ளிக்கல்வித் துறையில் சமச்சீர்கல்வி, செயல்வழிக் கற்றல் போன்ற சீர் திருத்தங்களை அறிமுகம் செய்தவரான தங்கம் தென்னரசுவுக்கு மீண்டும் ஒதுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்த துறை மிகவும் இளையவரான மகேசுக்கு ஒதுக்கப்பட்டது பலரையும் நெற்றி சுருக்கவைத்துள்ளது. எனவே, இவரது நியமனமும் மிகவும் கவனம் பெற்றுள்ளது.

தங்கம் தென்னரசு, எஸ்.எஸ்.சிவசங்கர் வழக்கமாக பள்ளிக் கல்வியோடு இணைத்து வழங்கப்படும் தமிழ்வளர்ச்சித் துறை தற் போது தொழில் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள தங்கம் தென்னரசுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மிகப் பெரிய சவாலை எதிர்கொண்டுள்ள சூழ்நிலையில் அத்துறைக்கு தங்கம் தென்னரசு நியமிக்கப்பட்டுள்ளதும் கவனம் பெற்றுள்ளது. இவர், முன்னாள் அமைச்சர் தங்க பாண்டியனின் மகன், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியனின் தம்பி.

சமூக ஊடகத்தில் மிகுந்த கவனம் பெற்றுள்ள மற்றொரு நியமனம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கருடையது. எழுத்தாளர், ஃபேஸ்புக்கில் ஆழமான அரசியல் கட்டுரைகளை எழுதக்கூடியவர் என்பது இவர் பற்றிய அறிமுகம்.

தென்னரசு, சிவசங்கர் இருவருமே படிப்பால் பொறியாளர்கள். நல்ல எழுத்தாற்றல் கைவரப்பெற்றவர்கள்.

சிவசங்கரின் 'தோழர் சோழன்' அரசியல் வரலாற்றுப் புதினம் அமேசான் கிண்டில் பென் டு பப்ளிஷ் போட்டியில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறி கவனம் பெற்றது குறிப்பிடத்தக்கது.



**தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மு.க.ஸ்டாலின் முதலில் 5 முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.**

**1. கொரோனா கால பொருளாதார நெருக்கடியை மக்கள் சமாளிக்க உதவும் வகையில் அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள அனைவருக்கும் 4,000 ரூபாய் வழங்கும் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், முதல் தவணையாக 2.07 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு மே மாதமே ரூ.2 ஆயிரம் வழங்கும் உத்தரவில் முதல்வர் கையெழுத்திட்டுள்ளார். இதனை நிறை வேற்ற அரசுக்கு 4,153 கோடி ரூபாய் செலவு பிடிக்கும்.**

**2. ஆவின் பால் விலை ஒரு லிட்டருக்கு 3 ரூபாய் வீதம் குறைத்து விற்பனை செய்யப்படும். இந்த விலை குறைப்பு 16 மே 2021 முதல் அமலுக்கு வரும்.**

**3. தமிழ்நாடு முழுவதும் இயங்கும் அரசின் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் எல்லாப் பெண்களும் கட்டணமில்லாமல், பேருந்து பயண அட்டை இல்லாமல் நாளை முதல் பயணம் செய்யலாம் என்றும் முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.**

**இதன் மூலம் போக்குவரத்து கழகங்களுக்கு ஏற்படும் கூடுதல் செலவான 1,200 கோடி ரூபாயை, அரசு மானியமாக வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 4. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்கிற திட்டத்தை செயல்படுத்த ஒரு புதிய துறையை உருவாக்கி அதற்கு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவரை நியமிக்கும் அரசாணைக்கு முதல்வர் ஒப்புதல் அளித்துள்ளார்.**

**தேர்தல் பரப்புரையின்போது தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் தங்கள் பிரச்சனை தொடர்பாக மக்களிடம் மனுக்களைப் பெற்ற மு.க.ஸ்டாலின் இந்த மனுக்கள் மீது ஆட்சிக்கு வந்த 100 நாள்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார். இந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இந்த திட்டம் செயல்படும்.**

**5. கொரோனாவால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று வருகிறவர்களின் சிகிச்சைக் கட்டணத்தை மாநில அரசே காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்க ஸ்டாலின் ஆணை பிறப்பித்திருக்கிறார்.**

**தொகுப்பு : இணையம்**

# சா(கா)தல்

அது ஒரு கார்த்திகை மாதத்தின் ஆரம்ப நாட்கள் சுதாகர் அன்சி இருவரும் கா.பொ.தா.சாதாரண தரப்பரீட்சைக்காக தங்களை தயார்ப்படுத்திக் கொண்டிருந்தனர் அன்றைய நாட்களில் பிரபலமான ஆசிரியர்களின் கருத்தரங்கு வகுப்புக்களுக்கு மாணவர்கள் போட்டி போட்டுக்கொண்டு செல்வது வழமையாக விருக்கவே அப்படி ஒரு வகுப்பில் தான் இருவரும் முதன் முதலில் சந்தித்துக் கொண்டனர் முதல் சந்திப்பு பெரிதாய் எந்த உணர்வுகளையும் அவர்களுக் குள்ளாய் கடத்தியிருக்கவில்லை "பார்த்ததும் காதல் (love at first sight) " என்பது என்னவோ இவர்களிடம் வீண் வாதமாகிப்போயிருந்தது

இருவரும்நன்றாகபடிக்கும்மாணவர்கள் என்பதாலோ என்னவோ அவர்கள் உறவும் கல்விசார்ந்தே பிள்ளையார் சுழியிடப்பட்டதெனலாம் இவ்வாறு அவர்கள் நட்பும் படிப்பும் ஒரே நேர் கோட்டில் ஒன்றாகப் பயணித்துக் கொள்ள பரீட்சைக்கான நாட்கள் நெருங்கத் துவங்கவும் அவர்களுக் குள்ளான நெருக்கம் குறைய ஆரம்பி த்திருந்ததோ என்னவோ அது வரை இருவரும் அறியாத உணர்வு ஒருவர் மீது ஒருவர் அளவற்ற காதலைக் கொண்டிருந்ததை உணரத் தொடங்கியும் இவருவரும் வெளிக்காட்டாமலே நாட்கள் நகர்ந்து பரீட்சையும் அவ்வாறே முடிய...

சுதாகர் கணிதபாடமும் அன்சி விஞ்ஞானமும் என தெரிவு செய்ய அவர்களுக்குள்ளான இடைவெளி சற்றாய் அதிகரித்தே போனது இந்த நாட்களுக்குள்ளாய் சுதாகருக்கு புதிதாய் அவன் வகுப்பறை யில் பெண் நட்பொன்று உருவாகவே அன்சிமீதான காதல் சற்றும் குறை யாத அவன் நல்ல ஒரு நண்பியா ய் மாத்திரமே துர்க்காவை பார்த்தான் ஆனால் அவளுக்கோ சுதாகர் மீது ஒரு ஈர்ப்பு இருக்கவே அவனிடம் தன் காதலைச்சொல்லிவிடும் நோக்கோடு அவனை தன் வீட்டிற்கு அழைக்க அவனோ வரமறுத்தன் அவள் வற்புறுத்தல் தொடரவே வழியற்றவனாய் அவனும் அவள் அழைப்பை ஏற்று அடுத்த நாள் அவள் வீட்டிற்கு செல்லவே வாசலில் அவனுக்காய் காத்து நின்றவள் அவன் கைகளை இறுகப்பற்றி அவனை வீட்டிற்குள்ளாய் இழுத்துச்செல்ல

" வீட்ட யாரையும் காணமே எங்க துர்க்கா எல்லாரும் "

"டேய் சுதாகர் அவங்க வெளிய போ யிட்டாங்க இரவுதான் வருவாங்கடா நீ வா உள்ள ..."

"என்னடி சொல்ற யாருமே இல்லாத வீட்ட என்ன ஏன் கூப்பிட்ட லூசா உனக்கு யாருப்பார்த்தா என்ன ஆகுறது நான் போறன்"

என்றவாறே அவள் கைகளை உதறி யபடி வெளிய வர முற்பட்ட சுதாகரை இறுக இழுத்து அணைத்தவளாய்

" டேய் i love you da இத சொல்லத் தான் உன்ன கூப்பிட்டன்டா எனக்கு உன்ன பாத்த முதல்நாளே பிடிச்சிட்டு நீயா சொல்லுவனு பாத்திட்டு இருந்தன் நீ சொல்ற மாதிரி தெரியல அதுதான் வெக்கத்த விட்டு நானே சொல்லிட்டன்டா i really love you da "

அவள் வார்த்தைகளைக்கேட்டு பேய் அறைந்தவன் போல நின்ட சுதாகர் அவளை தூரமாய் தள்ளிவிட்டு

"இங்க பார் துர்க்கா என்ன இதெல்லாம் நான் ஏற்கனவே அன்சிய மனசுல வச்சிருக்கன் அவள்தாதன் எனக்கு எல்லாமே இத உன்னட்ட சொல்லாம விட்டது என்னோட தப்புத்தான் நான் போறன் எதையும் மனசுல போட்டு குழப்பாம படிக்கிற வேலைய மட்டும் பாருடி"

என்றவாறே வேகமாய் அந்த இடத்தை விட்டு புறப்பட்டவன் வீடு சேர முன்னதாய்

புவனேஸ்வரன் தர்சிகன்





அன்சியிடம் இருந்து அழைப்புவர " Hello யாரு...?""

" யாரோ அன்சிடா"

" அன்சியா சொல்லுடி என்ன இந்த நேரத்தில call பண்ற எதும் அவசரமா இல்லனா நான் வீட்ட போய் திரும்ப எடுக்கவாடி..."

"ம்ம் இனி எங்களோட கதைக்கத் தான் உங்களுக்கு நேரம் இருக்காதே என்னோட நம்பரக்கூட உனக்கு தெரியல யார் என்டு கேக்குறிங்க சுதாகர் அவ்வளவு தான்ல என்னாவாம் துர்க்கா!!!!"

" என்னடி கதைக்கிற துர்க்காவா ஏன் அவளுக்கு என்ன ?"

"எல்லாம் எனக்கு தெரியும் சுதாகர் ஒன்டும் மறைக்க இல்ல ஒரே காதல் போல "

அவள் கேள்விகளால் அதிர்ந்தவன் பதிலளிக்க முன்பதாய் வாகனம் ஓடியபடி தொலைபேசி பாவித்ததில் கை நழுவிய போன் மழை வெள்ளத்தில் விழுந்து Off ஆகவே வீட்டிற்கு போய் விளக்கமாய் அனைத்தையும் சொல்லலாம் என்னும் எண்ணத்தோடு வீடு சென்றான்.

வீட்டு கதவுகள் தட்டப்பட்டன

அது நள்ளிரவு என்பதாலும் வீட்டில் யாரும் இல்லாததாலும் சுதாகர் இதயம் கதவை விட வேகமாக அடித்துக் கொண்டது

"சுதா டேய் கதவ திறடா "

ஓர் பெண்குரல்

ஆச்சரியத்தின் உச்சம் யாராக இருக்கும் இந்த நள்ளிரவில்? அதுவும் ஒரு பெண்

சற்று தயக்கத்துடன் கதவை நோக்கி நடந்தான் சுதாகர்

கதவை அடைந்தவன் தயக்கத்துடன்

"யார் அது இந்த நேரத்தில்"

" நான்தான்டா அன்சி"

"அன்சி நீயாடி இந்த நேரத்தில இங்க என்ன பண்ற "

"டேய் முதல் கதவ துறடா "

" சரி சரி"

மெல்லமாக கதவைத் திறந்தன் ஒரு கனம் அப்படியே உறைந்து நின்றான்

மழையில் நனைந்த அவள் மேனி கவர்ச்சியின் உட்சமாய் காட்சியளிக்க

"டேய் என்னடா பாக்கிற வெளிய சரியான மழைடா போ போ ஒரு டவல் எடுத்துட்டுவா"

"ம்ம் அம்மாட றூம்ல உடுப்பு இருக்கு அதை எடுத்து மாத்து ஈரத்தோட நிக்காத"

"சரிடா நான் உடுப்ப மாத்திட்டு வாரன் மழைவிடத்தான் போகலாம் போல வீட்ட இரவு இங்க தங்கவாடா"

மென் சிரிப்புடன்

"இத நீ கேக்கவா வேணும் இதுவும் உன்ட வீடுதான் "

சரிடா நான் உடுப்ப மாத்திட்டு வாரன்

(10 நிமிடம் கழித்து )

இருவருக்கும் இடையிலான உரையாடல் வார்த்தைகளற்று நீண்டது

நேரம் 11 மணியை நெருங்கவே அவள் நடத்தையில் மாற்றத்தை உணர ஆரம்பித்தான் சுதாகர்

விசித்திரமான சில அசைவுகளும் முக பாவனைகளும் அவள் தன்னை அறியாமல் வெளிப்படுத்த ஆரம்பித்திருந்தாள்.

என்னடி ஆளே மாறிட்ட இவ்வளவு அழகாயிட்டா என அவளின் அழகை வர்ணிக்க ஆரம்பித்தவனின் தொலைபேசி அதிரத்தொடங்கியது

அதில் வந்திருந்த அரியின் குறுஞ்செய்தி அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தவே திகில் கலந்த பயத்துடன் தன் முகநூலை வேகமாக நோண்டினான் ..

அரி:- "ansi is death by Suicide Now machan"

முகநூலும் அந்த தகவலை சில படங்களுடன் ஆதாரப்படுத்த செய்வ தறியாது நின்றவன் உரோமங்கள் விறைத்தெழுந்தன ...



# அறிவியல் மலர்



## 78 ஆயிரம் ஆண்டு பழமையான குழந்தையின் கல்லறை கண்டுபிடிப்பு

78 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு குழந்தை நல்லடக்கம் செய்யப்பட்டது. ஆப்ரிக்காவின் மிகப் பழமையான இடுகாட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. மத்திய கற்காலத்தைச் சேர்ந்த 3 வயது குழந்தையின் கல்லறை கென்யா நாட்டில் ஒரு குகையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அக்குழந்தையின் கல்லறை மற்றும் எச்சங்களை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள், அக்குழந்தையின் தலையை எப்படி ஒரு தலையணையில் கிடத்தி இருப்பது போல அடக்கம் செய்திருக்கிறார்கள் என, நேச்சர் என்கிற பத்திரிகையில் விவரித்து இருக்கிறார்கள்.

விஞ்ஞானிகள் அக்குழந்தையை 'மடொடொ' என பெயரிட்டு இருக்கிறார்கள். மடொடொ என்றால் ஸ்வாஹிலி மொழியில் 'அந்த குழந்தை' என்று பொருள். மீதமிருக்கும் எழும்புத் துண்டுகளை பத்திரமாக பாதுகாக்கும் நோக்கில், சர்வதேச அகழ்வாராய்ச்சியாளர்கள் அணி அக்கல்லறையை பாதுகாப்பாக பிளாஸ்டரில் வெளிக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே அவ்வுடலைக் குறித்து மேலதிகமாக தெரிந்து கொள்ளத் தேவையான ஆராய்ச்சிகளை செய்ய, அதை பாதுகாப்பாக பரிசோதனைக் கூடத்துக்கு அனுப்பி வைக்க முடிந்தது.


"ஒரு நிழலை அகழ்வாய்வது போல இருந்தது" என்கிறார் ஸ்பெயின் நாட்டின் மனித பரிணாம வளர்ச்சியின் தேசிய ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் பேராசிரியர் மரியா மார்டினான் டாரஸ். "நாங்கள் அதை வெளிக் கொண்டு வந்த போது, ஒரு குழந்தையைக் கையில் வைத்திருக்கிறோம் என்பதை நாங்கள் அறிந்திருக்கவில்லை" என அவர் பிபிசியின் இன்சைட் சயின்ஸ் ப்ரோகிராமிடம் கூறினார். ஆராய்ச்சியாளர்களால் அக்குழந்தையின் பற்களை ஆராய முடிந்தது. அப்படித் தான் அது ஒரு 2 - 3 வயதுக்கு இடைப்பட்ட மனித குழந்தை என உறுதி செய்ய முடிந்தது. பரிசோதனையில் அக்குழந்தையின் உடல் தாயின் வயிற்றுக்குள் இருக்கும் கருவைப் போல கிடத்தப்பட்டிருப்பது தெரிய வந்திருக்கிறது.

அக்குழந்தையின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட போது இறுக்கமாக மூடப்பட்டிருக்கலாம் என, எழும்புகள் நகர்ந்திருப்பது நமக்கு வெளிப்படுத்துகிறது. அதே போல அக்குழந்தையின் தலை ஒரு தலையணை போன்ற இலைதலைகளின் மீது கிடத்தப்பட்டிருக்கலாம். அது காலப்போக்கில் மட்கிப் போயிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. "கடைசியாக உறங்கும் போது போர்த்தப்படுவது போல, அக்குழந்தை இலைதலைகளால் ஆன சேலை அல்லது விலங்கின் தோல்களால் மூடப்பட்டிருக்கலாம்" என விளக்குகிறார் பேராசிரியர் மார்டினான் டாரஸ்.

"அக்குழந்தை மீது அக்குழுவினருக்கு இருந்த உணர்வையும், ஒரு பண்பு நயத்தையும் இது வெளிப்படுத்துகிறது" குழந்தையின் எலும்பின் வடிவம் மற்றும் அளவு குறித்து மேலதிகமாக நடத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் பரிசோதனைகளில், அக்குழந்தை ஒரு ஆணாக இருக்கலாம் என்கிற முடிவுக்கு வந்திருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். "அந்த குழந்தை மக்கள் வாழ்ந்த இடத்திலேயே புதைக்கப்பட்டிருக்கிறார்" என பேராசிரியர் மார்டினான் டாரஸ் கூறினார். "இந்த நடத்தைகள் அனைத்தும் அக்குழுவினரின் வருத்தத்தைக் குறிப்பதாகவோ, அக்குழந்தையை செல்லவிடாமல் தடுப்பது போலவோ இருக்கிறது"

ஆப்ரிக்கா தான் தற்கால மனித இனத்தின் தொட்டில் எனக் கருதப்படுகிறது. ஆனால் முன்பு பயன்படுத்தப்பட்ட கருவிகள், கூட்டாக இணைந்து வாழ்வது என எல்லா ஆதாரங்களுக்கு மத்தியில் மனித பரிணாம வளர்ச்சியில், இறந்தவர்களை நல்லடக்கம் செய்யும் முக்கியமான விஷயம் மட்டும் காணவில்லை என கூறினார்கள் விஞ்ஞானிகள். "ஆப்ரிக்காவில் காணப்படும் அடுத்த பழமையான கல்லறை என்றால் அது சுமார் 74,000 ஆண்டு பழமையானது" என்கிறார் லண்டன் நகரத்தில் இருக்கும் நேச்சுரல் ஹிஸ்டரி மியூசியத்தைச் சேர்ந்த முனைவர் லூயிஸ் ஹம்ஃப்ரே. "ஆச்சர்யப்படுத்தும் வகையில் அதுவும் ஒரு இளம் வயதுக் குழந்தையின் கல்லறை, அது 50 ஆண்டுகளுக்கு முன் மோசமான முறையில் அகழ்வாய்ந்து எடுக்கப்பட்டது. எனவே அதைக் குறித்து நமக்கு அதிகம் தெரியாது"

"இங்கு நிச்சயமாக ஒரு தனிநபருக்கு ஏற்பட்ட இழப்பை வெளிப்படுத்தும் வகையிலான உணர்வு காணப்படுகிறது" என கூறினார். "அம்மக்கள் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தை பிரதிபலிக்கும் வகையில் பல குறியீடுகளைக் கொண்டிருந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் இவை" என்கிறார் முனைவர் லூயிஸ்.



## பிரிட்டனின் வருங்கால பறக்கும் வீரர்கள்!

வெறும் விஞ்ஞானக் கற்பனையாக இருந்தது அது. பிறகு, ஆர்வக் கோளாறுகள், பொழுது போக்காளர்களை ஈர்க்கக் கூடியதாக மாறியது. இப்போது, அதை ராணுவத்தினரே பயன்படுத்தலாமா என்று தீவிரமாக பரிசீலித்து வருகின்றனர். 'அயர்ன் மேன்' கதைகளில் வரும், 'ஜெட் சூட்' எனப்படும் பறக்கும் கருவியை முதுகில் கட்டிக் கொள்ள வேண்டும். அதிலுள்ள குட்டி 'ஜெட்' இயந்திரம் ஒரு மனிதரை அலேக்காக வானில் பறக்க வைக்கும். நிஜமாகவே ஜெட் சூட்டை தயாரிக்கும்,'கிராவிட்டி இண்டஸ்டிரீஸ்' அண்மையில் பிரிட்டனின் ராயல் கப்பற்படையினருக்கு அதை சோதித்துக் காட்டியுள்ளது. ஒரு வீரர், கிராவிட்டி ஜெட் சூட்டை முதுகில் கட்டி, சிறிய படகிலிருந்து பறந்து கிளம்பி, பெரிய நடுத்தர விமானப்படைக் கப்பல் ஒன்றில் போய் இறங்குகிறார்.

இந்தக் காணொலி, இணையத்தில் வைரலாகியுள்ளது. இன்னொரு காட்சியில், மூன்று வீரர்கள், அதே கப்பல் மீது வந்து இறங்குகின்றனர்.பிரிட்டனின் ராணுவ அதிகாரிகள் இந்த சோதனைகளைப் பார்த்து அசந்துவிட்டனர். எனவே, அடுத்து வரும் ஆண்டுகளில், பிரிட்டன் தன் முதல் ஜெட் சூட் படையை அறிவிக்கக்கூடும்.




## தானோட்டி தெருக்கூட்டி வாகனம்!

ஓராண்டு சோதனைகளுக்குப் பிறகு, ஹெல்சிங்கி நகரில் அது உலா வரத் துவங்கிவிட்டது. பின்லாந்தைச் சேர்ந்த, 'ட்ரோம்பியா டெக்னாலஜிசின்' படைப்பான, 'ட்ரோம்பியா பிரீ' என்ற தானோட்டி தெருக்கூட்டும் இயந்திரம், இரவு நேரத்தில், ஹெல்சிங்கியின் பாதைகளை போகிற போக்கில் சுத்தம் செய்யத் துவங்கியுள்ளது.




வெயில், மழை, பனி என எந்த பருவ நிலையிலும் சளைக்காமல் குப்பையை அகற்றும்படி ட்ரோம்பியா பிரீ வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு பெரிய அளவுள்ள, 'வாக்கும் கிளீனர்' போல இருந்தாலும், நான்கு சக்கரங்கள் கொண்ட ட்ரோம்பியா பிரீயில், நவீன தானோட்டிகளில் உள்ளதைப் போலவே, 'லிடார்' மற்றும் சாலையை நோக்கும் கேமராக்கள், செயற்கை நுண்ணறிவு சில்லு போன்றவை உள்ளன. எனவே, இதை தெருக்கூட்டும் தானோட்டி வாகனம் என்பதே சரியாக இருக்கும். ஹெல்சிங்கி நகரின் சில பகுதிகளை சுத்தம் செய்யத் துவங்கியுள்ள ட்ரோம்பியா, 2022 வாக்கில் வர்த்தக ரீதியில் ஐரோப்பாவின் பிற நகர்களிலும் விற்பனைக்கு வரும்.

## சிந்தனையாளர் முத்து

**நாம் எதிர்கொள்வதிலேயே அழகான அனுபவம் என்றால், அது புதிர்த் தன்மை தான். அதுதான் கலை மற்றும் அறிவியலின் ஊற்றுக்கண்.**

**ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்,**
**அமெரிக்க இயற்பியலாளர்.**





# விளையாட்டு செய்திகள்



## ஸ்பானிஷ் கிராண்ட் பிரிக்ஸ்: நடப்பு சம்பியன் லீவிஸ் ஹெமில்டன் முதலிடம்!

பர்முயுலா-1 கார்பந்தயத்தின் ஸ்பானிஷ் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில், நடப்பு சம்பியனான மெர்சிடஸ் பென்ஸ் அணியின் லீவிஸ் ஹெமில்டன், முதலிடம் பெற்றுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் 'பார்முலா 1' கார் பந்தயம், 23 சுற்றுகளாக நடைபெறும். ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு நாடுகளில் நடைபெறும். இதன்படி, நடப்பு ஆண்டின் நான்காவது சுற்றான ஸ்பானிஷ் கிராண்ட் பிரிக்ஸ், பார்சிலோனா- கட்டலோனியா ஓடுதளத்தில் நடைபெற்றது. இதில் 308.424 கிலோ மீட்டர் பந்தய தூரத்தை நோக்கி, 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர்.



இதில் நடப்பு சம்பியனான மெர்சிடஸ் பென்ஸ் அணியின் லீவிஸ் ஹெமில்டன், பந்தய தூரத்தை 1 மணித்தியாலம் 33 நிமிடங்கள் 07.680 வினாடிகளில் இலக்கை கடந்து முதலிடத்தை பிடித்தார். இதற்காக அவருக்கு 25 புள்ளிகள் வழங்கப்பட்டது. அவரை விட 15.841 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த, ரெட்புல் அணியின் வீரரான மேக்ஸ் வெர்ஸ்டபேன், இரண்டாவது இடத்தை பெற்றார். அத்தோடு அவர், இரண்டாம் இடத்திற்கான 19 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டார்.

26.610 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த மெர்சிடஸ் பென்ஸ் அணியின் மற்றொரு வீரரான வால்டெரி போட்டாஸ் மூன்றாவது இடத்தை பிடித்தார். அதற்கு அவருக்கு 15 புள்ளிகள் வழங்கப்பட்டது. இதுவரை நடைபெற்று முடிந்துள்ள நான்கு சுற்றுகளின் முடிவில், லீவிஸ் ஹெமில்டன் மூன்று வெற்றிகளுடன் 94 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். இதற்கு அடுத்தப்படியாக மேக்ஸ் வெர்ஸ்டபேன் ஒரு வெற்றியுடன் 80 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், வால்டெரி போட்டாஸ் 47 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். அடுத்த ஐந்தாவது சுற்றான மோனோகோ கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 23ஆம் திகதி, மோனோகோ சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

## அவுஸ்ரேலியர்கள் மாலைதீவில் கைகலப்பு?

கொரோனா பாதிப்பு காரணமாக ஐ.பி.எல். தொடர் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. ஐ.பி. எல். தொடரில் விளையாடிய அவுஸ்ரேலிய வீரர்கள் மாலைதீவுகளுக்குச் சென்றுள்ளனர். அங்கிருந்து அவர்கள் தமது நாட்டுக்கு அழைத்துச்செல்லப்படவுள்ளனர்.

இந்த நிலையில், மாலைதீவுகளில் உள்ள மதுபான விடுதியொன்றில் சன்ரைசர்ஸ் மற்றும் அவுஸ்ரேலிய அணிகளின் முன்னணி வீரரான டேவிட் வோர்னரக்கும் மற்றும் அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரரும் வர்ணணையாளருமான மைக்கேல் ஸ்லேட்டருக்குமிடையே கைகலப்பு நடைபெற்றதாக அவுஸ்ரேலிய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. இருவரும் முதலில் வாய்த்தர்க்கத்தில் ஆரம்பித்து பின்னர் மோதலில் ஈடுபட்டதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் தகவலை சம்பந்தப்பட்ட இருவருமே மறுத்துள்ளனர் என்றும் தாங்கள் இருவருமே நல்ல நண்பர்கள் என்பதால் அப்படி நடக்க வாய்ப்பே இல்லை என்று இருவருமே மறுப்பு தெரிவித்ததாகவும் அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.



## மட்ரிட் பகிரங்க டென்னிஸ்: இரண்டாவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றார் ஸ்வெரவ்!

மட்ரிட் பகிரங்க டென்னிஸ் தொடரில் ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ் இரண்டாவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். அன்று (ஞாயிற்றுக் கிழமை) நடைபெற்ற மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், இத்தாலியின் மேட்டியோ பெரெட்டினியை எதிர்கொண்டார். பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டே இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்தது. டை பிரேக் வரை நகர்ந்த முதல் செட்டில் 7-6 என பெரெட்டினி செட்டைக் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், மீண்டெழுந்த அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், செட்டை 6-4 என கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றியதால் வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செட் எதிர்பார்ப்பை எகிற வைத்தது. மூன்றாவது செட்டில் இருவரும் விட்டுக்கொடுக்காமல் சிறப்பாக விளையாடினர். இதில் ஆக்ரோஷமாக விளையாடிய அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், 6-3 என செட்டைக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார். ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், இதற்கு முன்னதாக 2018ஆம் ஆண்டு சம்பியன் பட்டதை வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஒலிம்பிக் திட்டமிட்டபடி நடக்கும் ஒலிம்பிக் சபைத் துணைத் தலைவர் நம்பிக்கை

உலகின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வான ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கடந்த ஆண்டு நடக்க ஏற்பாடாகியிருந்த நிலையில், கொரோனா அச்சத்தால் தள்ளிவைக்கப்பட்டு வருகிற ஜூலை 23 முதல் முதல் ஓகஸ்ட் 8 வரை நடைபெறவிருக்கிறது.

ஆனால், மறுபடியும் கொரோனா பரவல் உச்சத்தை எட்டியிருப்பதால் ஒலிம்பிக் போட்டி திட்டமிட்டபடி நடக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த நிலையில் சர்வதேச ஒலிம்பிக் சபையின் துணைத் தலைவரும், அவுஸ்ரேலிய ஒலிம்பிக் குழுத் தலைவருமான ஜான் கோயட்சிடம், தற்போதைய சூழலில் ஒலிம்பிக் போட்டி தள்ளிவைக்கப்படவோ? அல்லது ரத்தாகவோ வாய்ப்பு உள்ளதா என்று கேட்கப்பட்டபோது, 'இல்லை, அதற்கு வாய்ப்பே இல்லை' என்று உறுதிபடக் கூறியுள்ளார்.

'எல்லாவிதமான கொரோனா தடுப்பு பாதுகாப்பு அம்சங்களையும் மேற்கொள்ள நாங்கள் ஜப்பான் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். எல்லாம் சரியாக நடைபெற்றுவருகிறது. கொரோனா தடுப்புக்கு தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்துவோம். இங்கு தடுப்பூசி தேவை இருக்காது என்று அவர்கள் கணித்துள்ளனர். நிலைமையில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. ஒலிம்பிக் திட்டமிட்டபடி நடக்கும்' என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.





# உலக பார்வை



## கட்டுப்பாட்டை இழந்தது சீன ரொக்கெட்!

விண்ணில் கட்டுப்பாட்டை இழந்த சீன ரொக்கெட் எப்போது வேண்டுமானாலும் பூமியில் விழலாம் எனக் கூறப்படுகின்றது. அமெரிக்காவைப் போல் தங்களுக்கென்று சொந்தமான விண்வெளி நிலையத்தை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக, கடந்த மாத இறுதியில், Long March 5B என்றழைக்கப்படும் 100 அடி உயர ராட்சத ராக்கெட்டை விண்ணில் செலுத்தியது.

தொழில்நுட்பக் கோளாறால் கட்டுப்பாட்டை இழந்த ராக்கெட், மணிக்கு 27,600 கிலோ மீட்டர் வேகத்தில், 90 நிமிடங்களுக்கு ஒரு முறை பூமியை சுற்றி வந்து கொண்டிருக்கிறது. 21 டொன் எடையிலான இந்த ரொக்கெட், வரும் ஒன்பதாம் திகதி பல பாகங்களாக உடைந்து மக்கள் வசிக்கும் பகுதிகளில் விழ வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

## குண்டு வெடிப்பில் சிக்கினார் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி!

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் சபாநாயகருமான மொஹமட் நஷீத் குண்டு வெடிப்பில் சிக்கி காயமடைந்துள்ளார். இந்தக் குண்டு வெடிப்பு, அவரது வீட்டிற்கு வெளியில் அன்று (வியாழக்கிழமை) இரவு இடம்பெற்றுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




இந்நிலையில், காயமடைந்த மொஹமட் நஷீத், ஏ.டி.கே. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாக அந்நாட்டு பொலிஸார் ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளனர். மேலும், இந்தக் குண்டு வெடிப்பில் வெளி நாட்டு சுற்றுலாப் பயணி ஒருவரும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதி பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

## மியன்மாரில் செயற்கைக் கோள் தொலைக்காட்சி சேவைகளுக்குத் தடை!

மியன்மாரில் செயற்கைக் கோள் தொலைக்காட்சி சேவைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. செயற்கைக்கோள் தொலைக்காட்சி இனி சட்டப்பூர்வமானது அல்ல எனவும் அவ்வாறு சட்டத்தை மீறுபவர்கள் அல்லது செயற்கைக் கோள் ஊடான தகவல்களைப் பயன்படுத்துவோர் கைது செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் குற்றத்துக்கு ஒரு வருட சிறைத்தண்டனையும் 320 டொலர் அபராதமும் விதிக்கப்படும் என மாநில தொலைக்காட்சியான எம்.ஆர். டிவி தெரிவித்துள்ளது. குறித்த ஊடகங்கள், தேசிய பாதுகாப்பையும், சட்டத்தின் ஆட்சியையும், பொது ஒழுங்கையும் குறை மதிப்பிற்கு உட்படுத்தும் செய்திகளை ஒளிபரப்பி தேசத்துரோகம் செய்பவர்களை ஊக்குவிப்பதாக அந்நாட்டு இராணுவத் தலைமை குறிப்பிட்டுள்ளது. மியன்மாரில், கடந்த பெப்ரவரி முதலாம் திகதி முதல் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் இதனை எதிர்த்து மக்கள் பெரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், பாதுகாப்புப் படையினர் போராட்டங்களைத் தடுப்பதற்கான துப்பாக்கிச் சூடுகளை மேற்கொண்டுள்ளதோடு ஊடகங்கள் மீதும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இதனிடையே, மக்களி மீதான பாதுகாப்புத் தரப்பினரலின் தாக்குதலில் இதுவரை 760 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், செய்திகளை வெளிக்கொண்டுவந்த குறைத்தது 50 சுயாதீன ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்காவின் இராஜதந்திரம் போலித்தனமானது வடகொரியா எச்சரிக்கையுடன் அறிவிப்பு!

அமெரிக்காவின் இராஜதந்திரம் போலித்தனமானது என வடகொரியா தெரிவித்துள்ளது. அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை யோசனையை நிராகரித்த பைடன் நிர்வாகம் அணுசக்தி மயமாக்கல் தொடர்பான இராஜதந்திர பேச்சுவார்த்தைகளுக்கு முயல்வதாக வட கொரியா குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவின் இராஜதந்திர முயற்சிகளை வடகொரியா நிராகரித்துள்ளதாக அந்நாட்டு அரசு ஊடகம் அன்று (ஞாயிற்றுக்கிழமை) தெரிவித்துள்ளது. அமெரிக்கா, தனது விரோதச் செயல்களை மூடிமறைப்பதற்கான ஒரு மோசமான அடையாள அட்டையே இராஜதந்திரம் என வட கொரிய வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. அத்துடன், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நாட்டை நோக்கிய தனது காலாவதியான நிலைப்பாட்டைக் கொண்டு ஒரு பெரிய தவறு செய்துள்ளதாக வடகொரியா குறிப்பிட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதி கிம் ஜொங் உன்னை பைடன் அவமதித்ததாக வட கொரிய வெளியுறவு அமைச்சகம் குற்றஞ்சாட்டியுள்ளதுடன் தம்மைத் தாண்டிவிட்டால் ஏற்படும் பாதிப்பை புரிந்துகொள்ளும் அளவுக்கு அமெரிக்காவை தாங்கள் எச்சரித்திருப்பதாகத் தெரிவித்துள்ளது. வட கொரியாவின் அணுசக்தி அபிலாசைகளைக் கட்டுப்படுத்த இராஜதந்திரம் மற்றும் கடுமையான தடுப்பு ஆகியவற்றைப் பயன்படுத்துவேன் என கடந்த புதன்கிழமை காங்கிரஸில் ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னரான முதல் உரையில் பைடன் கூறியிருந்தார். இந்நிலையிலேயே, வடகொரியா இவ்வாறு எச்சரிக்கை விடுக்கும் விதத்தில் பதிலளித்துள்ளது.



## பில் கேட்ஸ் – மெலிண்டா கேட்ஸ் விவாகரத்து செய்ய முடிவு

மைக்ரோசொப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் மற்றும் அவரது மனைவி மெலிண்டா 27 ஆண்டுகளுக்குப் பின் விவாகரத்து செய்ய முடிவெடுத்துள்ளனர். அமெரிக்காவின் பிரபல மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் பில் கேட்ஸ். அந்நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவர் இவரது மனைவி மெலிண்டா கேட்ஸ். கடந்த 1975ஆம் ஆண்டு பால் ஆலன் உடன் இணைந்து மைக்ரோசொப்ட் நிறுவனம் தொடங்கிய காலத்தில் அதன் தலைமை செயல் அதிகாரியாக பில் கேட்ஸ் செயல்பட்டார்.

அதன்பின், அதன் தலைவர் மற்றும் தலைமை மென்பொருள் வடிவமைப்பாளர் ஆகிய பதவிகளிலும் இருந்துள்ளார். அந்நிறுவனத்தில் மேலாளராகப் பணி புரிந்த மெலிண்டா கேட்சை சந்தித்து பில் கேட்ஸ் பின்னர் ஹவாயில் வைத்து திருமணம் செய்து கொண்டார். அதன் பின் 6 ஆண்டுகள் கழித்து, கடந்த 2000ஆம் ஆண்டு பில் கேட்ஸ் மற்றும் அவரது மனைவி மெலிண்டா கேட்ஸ் பெயரில் அறக்கட்டளை தொடங்கப்பட்டது. இலாபநோக்கு இல்லாத இதன் வழியே கல்வி, பாலின சமத்துவம் மற்றும் சுகாதார நலம் போன்ற சமூக பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



இந்நிலையில், இந்தத் தம்பதி 27 ஆண்டுகளுக்குப் பின் விவாகரத்து செய்ய முடிவு எடுத்துள்ளனர். இது தொடர்பாக பில் கேட்ஸ் தம்பதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: கடந்த 27 ஆண்டுகளில் 3 குழந்தைகளை வளர்த்துள்ளோம். உலகம் முழுவதும் பரந்து செயல்படும் அறக்கட்டளை ஒன்றையும் நிறுவி, அதனால் அனைத்துத் தரப்பு மக்களும் சுகாதாரமுடன் வாழ்வதற்கான வழிகள் செய்து வரப்பட்டுள்ளன.

இந்தப் பணியில் இணைந்து தொடர இருக்கிறோம். எனினும், எங்களது திருமண வாழ்வை முடித்துக் கொள்ள நாங்கள் முடிவு செய்துள்ளோம். எங்களுடைய வாழ்வின் அடுத்த கட்டத்தில் ஒன்றாக இணைந்து, தம்பதியாக வளர்ச்சி அடைவதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

# உங்களுக்கு நோய் தொற்றியுள்ளது என்று நீங்கள் நினைத்தால்?



காய்ச்சல் — இருமல் — தொண்டை வலி — சுவாசிப்பதில் சிரமம்

இவ் அறிகுறிகள் உங்களிடம் காணப்பட்டால் நீங்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் எனக் கூற முடியாவிட்டாலும், இவை கொரோனா வைரஸ் தொற்றின் போது ஏற்படும் அறிகுறிகள் என்பதால் உங்கள் அன்புக்குரியவர்களைப் பாதுகாக்க கீழே குறிப்பிட்டுள்ள படிகளைப் பின்பற்றவும். இலங்கை நாட்டின் குடிமகனாக இது உங்கள் தேசிய பொறுப்பாகும்.

மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவதைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம்.

முடியுமான வரை நீங்கள் மட்டும் தனியாக இருப்பதற்கு ஒரு அறையை ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.

மற்ற குடியிருப்பாளர்களிடமிருந்து ஒரு மீட்டருக்கும் அதிகமான தூரத்தை பராமரிக்கவும்.

முடியுமான வரை தனியான கழிப்பறை , குளியலறையை பயன்படுத்தவும். இல்லையென்றால், கழிப்பறை , குளியலறையைப் பயன்படுத்திய பின் அவற்றின் தாழ்ப்பாள் மற்றும் கைப்பிடிகளை சவர்க்காரம் பாவித்து கழுவவும்..

விருந்தினர்களை வீட்டுக்கு வரவழைப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

நீங்களும் பிற குடியிருப்பாளர்களும் முடியுமான வரை குறைந்தது இருபது வினாடிகள் சவர்க்காரம் உபயோகித்து கைகளை கழுவ வேண்டும்.

நீங்கள் உபயோகிக்கும் தட்டு, கோப்பை, துவாய் மற்றும் படுக்கை போன்றவற்றை மற்ற குடியிருப்பாளர்கள் பொருட்களுடன் சேராமல் தனியாக வைத்துக்கொள்ளவும். இவற்றை கழுவும் போதும் பிறரின் பொருட்களுடன் சேராமல் தனியாக சவர்க்காரம் பாவித்து கழுவவும்.

தும்மும் போது அல்லது இருமும் போது முழங்கையின் மூலம், அல்லது கைக்குட்டை , திசு கடதாசியில் வாயை மூடி தும்மவும். ஒரு முறை உபயோகித்த திசு கைக்குட்டையை மூடியுடனான குப்பைக் கூடை ஒன்றிற்குள் வீசவும்..

நீங்கள் பயன்படுத்தும் முகமூடிகள் மற்றும் கையுறைகளை ஒரு முறை பயன்படுத்திய பிறகு, அதை மீண்டும் பயன்படுத்தாமல் மூடியுடனான குப்பைக் கூடை ஒன்றிற்குள் வீசவும்..

மிகவும் முக்கியமாக, நீங்கள் கடந்த இரண்டு வாரங்களுக்குள் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தால் அல்லது கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான ஒருவர் என சந்தேகத்திற்கிடமான நபருடன் தொடர்பில் இருந்திருந்தால், உடனடியாக அப்பகுதியின் பொது சுகாதார ஆய்வாளர் அல்லது சுகாதார மருத்துவ அதிகாரியிடம் தெரிவிக்கவும்.

மருத்துவ சிகிச்சை குறித்த மேலதிக ஆலோசனைகளுக்கு 1999 ஆலோசனை சேவையை நீங்கள் அணுகலாம்.

சிகிச்சைக்காக போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்துகொள்ள, 1990 மருத்துவ அவசர ஊர்தி சேவையைத் தொடர்பு கொள்ளவும்.

## மேற்கண்ட அறிகுறிகளைக் கொண்ட,

கடந்த 14 நாட்களுக்குள் எந்த நாட்டிலிருந்தும் இலங்கைக்கு திரும்பியுள்ளவர்கள்

அல்லது

அறிகுறிகள் தோன்றுவதற்கு 14 நாட்களுக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட COVID-19 நோயாளியுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்கள்

அல்லது

விசேட வைத்திய நிபுணரினால் கடுமையான நிமோனியா நோயுடையவர் என தீர்மானிக்கப்பட்ட பயண மற்றும் நோய்த் தொடர்பு வரலாற்றை கொண்டிராதவர்கள்

உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவமனையிலிருந்து மருத்துவ ஆலோசனையைப் பெற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தகவல் : - சுகாதார மேம்பாட்டு பணியகம்

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 09.05.2021 அன்று வெளியிடப்பட்டது.